# திசை
THISAI

திசை 2 | 13-4-1990 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 5-00 | பக்கங்கள் 14 | முகம் 13


## பசு மாடுகளுக்கு விடுதலை

கடந்த போயா தினத்தன்று ஜனாதிபதி பிரேமா அனுராதபுரத்திற்கு அருகில் உள்ள ஹொரவக்க முகாமில் தடுத்து வைக்சப்பட்டிருக்கும் சுமார் 300 ஜே. வி. பி சந்தேக நபர்களுடன் சில அனுஷ்டானத்தில் ஈடுபட்டார். மேலும் இதையொட்டி இறைச்சி வெட்டுவதற்ளாகக் கொண்டு வரப்பட்ட 50 பசுமாடுகள் விடுவிக்கப்பட்டதோடு 84,000 தாமரைப் பூக்கள் ருவன் வெலிசயவைச் சுற்றி மிநக்க விடப்பட்டன

# இனப்பிரச்சினையின் தீர்வுக்கு பிரபா காட்டும் சமிக்ஞைகள்

**அண்மையில் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் பத்திரிகையாளாகளுக்கு — குறிப்பாகக் கொழும்புப் பத்திரிகையாளர்களுக்குக் கொடுத்த பேட்டியில், இனப்பிரச்சினை தீர்வுக்கு கூறிய மார்க்கங்கள் பற்றி பிரபல ஆங்கில அரசியல் விமர்சகர் சிங்கள மக்கள் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.**

அவர், பிரபாகரன் அவர்கள் முன்வைத்த யோசனைகளுள் முக்கியமான மூன்று அம்சங்களைப் பின்வருமாறு தந்துள்ளார்:

அமைதிக்கான வழியின் சாத்தியப்பாடு சிங்கள மக்களினதும் அவர்கள் தலைவர்களினதும் அணுகு முறையிலும் தன்மையிலும் தங்கியுள்ளது. அவர்கள்தமிழர்களுக்கு காலா காலமாக இழைத்து வந்த அநீதிகளை அகற்ற முன் வர வேண்டும்.

நாம் ஆயுதங்களைத் தூக்க வைத்ததற்குரிய காரணங்களை அறியுங்கள். நாம் ஆயுதங்களைத் தூக்க நேர்ந்ததற்குரிய காரணங்களை அகற்ற முன் வர வேண்டும் என்று சிங்கள மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எமக்கு அநீதி இழைக்கப்பட்டு மீண்டும் நாம் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டால் நாங்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடரத் தயங்க மாட்டோம்.

மேற்கூறப்பட்ட தலைவர் பிரபாவின் மூன்று முக்கிய அம்சங்களைப் பற்றி விமர்சித்த அந்த விமர்சகர் பின்வரும் முடிவுக்கு வருகிறார்:

விடுதலைப் புலிகள் எங்களைச் சிறிதும் நம்பவில்லை. தமிழர்களுக்கு சிங்கள இனம் 1956 இல் இருந்து இழைத்து வந்த துன்பங்கள் அத்தகைய கொடூரமானவை. ஆகவே நாட்டில் நாம் உண்மையாகவே அமைதியை நிலை நாட்ட விரும்பினால் அவர்களது உரிமைகளைக் கொடுக்க முன் வர வேண்டும்.

## அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் !

## பருத்தித்துறையிலும், திருமலையிலும் மோதல்

பருத்தித்துறையில் செவ்வாய்க்கிழமை, 10–ஆம் திகதி பிற்பகல் 6 மணியளவில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிலர் பொது மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலையடுத்து பருத்தித்துறை பொலிஸ் நிலையமும், வலவெட்டித்துறை பொலிஸ் நிலையமும் மூடப்பட்டு அங்கிருந்த பொலிஸார் மூட்டை முடிச்சுக்களோடு பலாலிக்குச் சென்றுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

வீதியில் சென்றுகொண்டிருந்த சில பெண்களோடு குரங்குச் சேட்டைகளில சில பொலிஸார் ஈடுபட்டனராம். சில பொதுமக்கள் அது குறித்து முறைப்பாடு செய்ய முற்பட்ட போது அவர்கள் தாக்கப்பட்டதாகவும், இதைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பொது மக்களில் இருவரும் ஒரு போராளியும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இது இவ்வாறிருக்க செவ்வாய் மாலை திருகோணமலை வீரநகர்ப்பகுதியிலும் பொலிஸ்காரர் வீதிவழியாகச் சென்று கொண்டிருந்த பெண்களோடு சேட்டை விட்டதைத் தொடர்ந்து, அப்பகுதிப் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டு பொதுமக்களிற் 10 பேர் அடிகாயங்களுக்கு உள்ளாகினர். ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்குள்ளானார். சம்பவத்தையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த திருமலைப் பொலிஸ் அத்தியட்சகர் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன கலந்துரையாடியதன் விளைவாக வீரநகர்ப் பொலிஸ் நிலையமும் மூடப்பட்டது.

## “எமது கல்வி அமைப்பு முழுவதும் மாற்றி அமைக்கப்பட வேண்டும்”

எமது கல்வி அமைப்பு செம்மையாகத் திட்டமிடப்படாததால் வாழ்விற்கான கல்வியாகவோ சமூக பொருளாதார நிலைபெயர்விற்கு வழிவகுப்பதாகவோ அது அமையவில்லை.


மேற்கண்டவாறு, யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, ‘உயர் கல்வி — சில அம்சங்கள்’ என்ற பொருள் பற்றி நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்,

பண்பாட்டிற்கும் சமூகத்திற்குமான தனிநாயகம் அடிகளார் நிலையம் ஒழுங்கு செய்திருந்த இக்கருத்தரங்கு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து பெண்கள் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

பேராசிரியர் துரைராஜா மேலும்கூறியதாவது: 1965 இல் நாம் ஏறக்குறைய 5000 மாணவர்களுக்கு பல்கலைக்ழக அனுமதி வழங்கினோம். 1990 இல் இத்தொகை ஏறக்குறைய 6000 ஆக மட்டுமே இருக்கின்றது. இது போதாது. மொத்த தேசிய உற்பத்தியில், கல்வியில் நாம் 4.5 வீதத்தினைச் செலவிடுகின்றோம். சார்க் நாடுகளைப் பொறுத்தவரையிலும், சில ஆசியான் நாடுகளைப் பொறுத்தவரையிலும், கல்வியில் நாம் செலவிடும் வீதமே கூடுதலானது, ஆனல் இந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது, எமது பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுவோரின் தொகை குறைவாகவே இருக்கின்றது.

எனவே நாம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவோரின் தொகையைக் கூட்டுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். மாகாண தொழில் நுட்பக் கல்லூரிகளைத் தரமுயர்த்தி அவற்றை நவீனமயப்படுத்தி, வ

(12ஆம் பக்கம் பார்க்க)



கடைசிச் சந்தர்ப்பம்

‘சற்றடே றிவியூ’வின் சகோதர வாரப் பத்திரிகை

திசை
THISAI

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 300/
அரைவருடம்–ரூபா: 150/-

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 850/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு
த. பெ. 122
யாழ்ப்பாணம்

## தந்தை செல்வா

தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னவென்றால், அமரர் தந்தை செல்வா அவர்களைத் தமிழ் மக்கள் மறந்து விட்டார்கள் போல் தெரிகிறது. குறிப்பாக தமிழ் இளைஞர்கள் மறந்து விட்டார்களே! அவர் தமிழ் பேசும் மக்களுக்கு சகல உரிமைகளையும் பெற பாடுபட்டார். தமிழ் மக்கள் இரத்தம் சிந்தாமல் சகல உரிமைகளுடன் வாழவேண்டும் என்று அயராது உழைத்தார். பாவம் அது ஜே.ஆரினால் முறியடிக்கப்பட்டது - Live and let live' என்பது அந்தப் பெரியாரின் இலட்சியமாகும்.

பொ. சிவபாதம்
யோகபுரம்

## பஜகோவிந்தம்

23-03-1990 இதழில் பிரசுரமாகியிருந்த "பஜகோவிந்தம்" என்ற சிறுகதையினது பரிசுத்தமான நோக்கம் கரு என்பனவும், தூவானம், கலைச்சாரல், ஆகிய பகுதிகளில் பிரசுரமாகியிருந்தவையும், சமூகப் பிரக்ஞை மிக்க மக்கள் எழுத்தாளர்களையும், பத்திரிகைகளையும், மனித மேம்பாட்டையும் வேண்டிநிற்கும் மனித சமுதாயத்திற்கு மிகவும் அத்தியாவசியமானவையே.

அதற்காக 'திசை' தனது பெறுமதிமிக்க இரண்டரைப் பக்கங்



களைத் தியாகம் செய்தமை பாராட்டிற்குரியது.

ஊற்றுப் பேனாவின் உள்ளே நின்று தாம் தற்செயலாக அறிந்த கல்விச் சேர்க்கை மூலம் விபச்சாரம் புரியும் அல்லது சோரம் போகும் இவர்களைவிட ஒரு வேளை உணவிற்காக கலவிச் சேர்க்கை மூலம் விபச்சாரம் செய்பவர்கள் மேலானவர்கள். ஏனெனில் அங்கு அயோக்கியத்தனமில்லை. அங்கேயுள்ளது அதிகுறைந்த அடிப்படைத் தேவைமட்டுமே.

இவர்களது முகமூடிகள் கிழித்தெறியப்பட வேண்டியவையே. அயோக்கியத்தனங்கள் அம்பலப்படுத்தப்பட்டுமக்களாலும் வாசகர்களாலும் இனங்காணச் செய்தல் உண்மையானபத்திரிகைகளினதும் எழுத்தாளர்களினதும் கடமை.

அதுவே பத்திரிகா தர்மமும்.

ஆனாலும் சிறியதோர் நெருடல் கண்ணில்லாதவர்கள், காதுகேளாதவர்கள், வாய்பேச முடியாதவர்கள் ஆகியோரை அழைக்கும் போது முன்பு பிரயோகித்த சொற்பதங்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்ட வாழ்க்கையையும் மனஉணர்வுகளையும் மீண்டும் பாதிக்கும் என்பதனை உணர்ந்த பின்அவர்கள் இன்று வலது குறைந்தவர்கள் என அழைக்கப்படுகின்றார்கள்.

அவர்களது உணர்வு உணர்ச்சி அபிலாசைகள் கற்பனை லட்சியம் என்பன எந்த ஒரு மனிதனுடையதற்கும் குறைவானது அல்ல. ஆனால் இயற்கையால் வஞ்சிக்கப்பட்டுள்ளார்கள்

'பஜகோவிந்தம்' என்ற சிறுகதை பெரும் நோக்குடன் படைக்கப்பட்டிருந்தாலும் ஜீவராஜ் என்ற பாத்திரமும் பிரயோகிக்கப்பட்டிருந்த ஒரு சில சொற்பதங்களும் மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் வேதனையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஜீவராஜ் போன்றவலது குறைந்த வாசகர்களை நிச்சயம்காயப்படுத்தும்.

பேராசிரியர் சர்வராகவனதும் ஏன் சிறுகதை ஆசிரியரினதும், மனங்களைக் கூட அனுதாபத்துடனும் அன்புடனும் பராமரிக்கப்பட வேண்டிய ஜீவாராஜின் நிலை பாதிக்காது விட்டமைதான் ஏனோ?

சி. இராமதாசன்
மானிப்பாய்

தங்கள் பத்திரிகையில் 1990.03.23-ஆம் திகதி வெளியிடப்பட்ட 'பஜகோவிந்தம்' என்னும் சிறுகதை பற்றி சில சந்தேகங்களை வினவ விரும்புகிறேன். தயவு செய்து தங்கள் பத்திரிகை மூலம் இதனைத் தெளிவுபடுத்தும்படி விரும்புகிறேன்.

1) இச் சிறுகதை எழுதியவர் பல விடயங்களை மிகத் துணிவுடன் தாம் எழுதியுள்ளதாகத் தம்பட்டம் அடிக்கும் வேளையில் எழுத்திலுள்ள துணிவு தனது பெயரை வெளியிடுவதில் இல்லாமல் போனது ஏனோ?
2) 'கார்த்தி நேசனின்' உண்மைப் பெயரைத் தெரிவிப்பீர்களா?
3) அப்படித் தெரியத் தயங்கினால் இத்தகைய ஆக்கங்களை தாங்கள் 'ஆரோக்கியமான பத்திரிகை' எனக் கூறிக் கொள்ளும் தங்கள் பத்திரிகையில் இனிமேலாவது வெளியிடாமல் செய்வீர்களா?
4) பல இதழ்களை வெளியிட்ட உங்களுக்கு தற்போது என்ன நடந்துவிட்டது?
5) சிறுகதை பற்றிய விமரிசனங்களுக்கூடாக, பல ஆக்க இலக்கியக்காரரை உதாசீனம் செய்யும் தாங்கள், இதனைமட்டும் 'சிறுகதை' என்று எப்படி ஒப்புக் கொண்டீர்கள்?

கி. ப. பகீரதன்
அல்வாய்.

## ஆசிரியர் குறிப்பு

'பஜகோவிந்தம்' கதையை எழுதிய ஆசிரியர் தனது சொந்தப் பெயரைப்போடாமல் விட்டமைக்குரிய பொறுப்பு எம்மைச் சார்ந்ததல்ல. சொந்தப் பெயரை போடுவதும் புனைபெயரைப் பாவிப்பதும் அவரது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைப் பொறுத்தது.

அவரது உண்மைப் பெயரை நாம் வெளியிட முடியாது; அது பத்திரிகை தர்மத்துக்குப் புறம்பானது.

நாம் மேற்படி கதையை பிரசுரித்தமைக்குரிய காரணம் அக்கதை எம்மைப் பொறுத்தவரை கலாரீதியாக வெற்றி பெற்ற கதையாக அமைந்திருப்பதே.

# கருணாநிதியும் இந்தியத் தேசியவாதமும்

நசிகேதன்

இலங்கையைவிட்டு விலகிச் சென்ற இந்தியத்துருப்புக்களை வரவேற்கும் வைபவம் தமிழ்நாட்டில் நடைபெற்றபோது அதில், தமிழ்நாட்டு முதலமைச்சரும், தி.மு.கவின் தலைவருமான மு. கருணாநிதி கலந்து கொள்ளவில்லை. இது குறித்து தமிழ்நாடு சட்டசபையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்குக் கருணாநிதி, இலங்கையில் தமிழ் இனப்படுகொலையில் ஈடுபட்ட படையை வரவேற்கத்தான் விரும்பவில்லை என்று வெகு சாதாரணமாகப் பதில் சொன்னார்.

கருணாநிதியின் மேற்படி கூற்று இந்தியப்படையினரை அவமதிப்பது மட்டுமல்ல, முழு இந்திய தேசியவாதத்துக்குமே விரோதமானதுதான். இந்த இடத்தில் கருணாநிதி தன்னை ஒரு இந்தியனாகக் காட்டிக் கொள்வதை விடவும் ஒரு தமிழனாகக் காட்டிக்கொள்ளவே முயன்றிருக்கிறார் என்பது தெளிவு. ஒரு இந்தியன் என்ற வகையில் வேறொரு நாட்டில் போரிலீடுபட்டு உயிரிழப்புக்களோடும், அபகீர்த்தியோடும். நாடுதிரும்பிய இந்தியத்துருப்புக்களின், 'தியாகங்களை'யோ, 'சாகசங்களையோ' கருணாநிதி புகழ்ந்து பேசவில்லை. மாறாக அது தமிழர்களைக் கொன்ற படை என மிகவும் இழிவாகச் சொல்லியிருக்கிறார்.

கருணாநிதி ஏன் அவ்வாறு சொன்னார்?, அவரது கூற்று இந்திய தேசியவாதிகளிடம் எத்தகைய பின்விளைவுகளை ஏற்படுத்தியது?

கருணாநிதி அவர் எழுதிய கதைகளில் வரும் அல்லது கதைவசனம் எழுதிய தமிழ்த் திரைப்படங்களில் வரும் கதாநாயகர்களைப் போன்ற வீரத் தமிழனாகவே தன்னை வெளிக்காட்டியிருக்கிறார். இலங்கைத் தமிழர்களையும், இந்தியத்தமிழர்களையும் இணைத்த அகன்ற தமிழ் இனத்துவத்தின் முன்னுதாரணமாகவே அவர் நடந்து கொண்டிருக்கிறார். இதனால் இந்திய தேசிய வாதத்திற்குப் பகையானதும், இந்தியராணுவத்தை அவமதிப்பதுமான ஒரு நிலைப்பாட்டை பகிரங்கமாகவே வெளிப்படுத்தியிருக்கிறார்.

அவர் இவ்வாறு செய்ததன் மூலம் இலங்கைத் தமிழர்களையும் தமிழ்ப்போராளிகளையும் கவர முயற்சிக்கிறார் எனவும் எடுத்துக் கொள்ளலாம். ஒன்று, இந்திய மத்திய அரசுக்கும், தமிழ்ப்போராளிகளுக்கும் இடையில் இணைப்பாளராகப் பணிபுரியும் கருணாநிதி, தமிழ்ப்போராளிகளை நோக்கிக் காட்டிய இணக்கச் சமிக்ஞையாகவும் அவரது இந்நடத்தையை நாம் கருத முடியும். இந்தச்சமிக்ஞையின் நோக்கம் தமிழ்ப் போராளிகளுடனான உறவுகளை மேலும் இறுக்கமாக்குவதாயிருக்கலாம்.

இலங்கையில் போரிலீடுபட்டுக் கொல்லப்பட்ட அல்லது காயப்பட்ட ஒவ்வொரு இந்திய னின் பொருட்டும், மொத்தமாக இலங்கையில் உண்டான தோல்வி, அவமானம் இவற்றின் பொருட்டும், இந்தியத் தேசியவாதமானது இலங்கைத் தமிழரின் போராட்டத்திற்கு பகைநிலையிலேயே இருக்க வேண்டும். ஆனால் உண்மை நிலை வேறுவிதமாகவே இருக்கிறது. கருணாநிதியின் நடத்தைக்கு இந்தியத்தேசியவாதிகளின் பிரதிபலிப்பு எவ்வாறிருக்கிறது என்று பார்த்தால்— இந்தியத் தேசியவாதிகளை கருணாநிதியின் நடத்தை அவ்வளவாக ஆத்திரப்படுத்தவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது

இன்று டில்லியில் ஆட்சியிலிருக்கும் வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசில் ஒரு அங்கமாயிருந்தபடியே கருணாநிதி இவ்வாறு நடந்து கொண்டமைக்கு, தேசிய முன்னணி அரசிடமிருந்து எதிர்ப்பேதும் எழவில்லை. டில்லி இதுபற்றி ஆச்சரியப்பட்டதாக மட்டும் செய்திகள் வெளிவந்துள்ளன. சிலசமயம் டில்லியிடமிருந்து ஒப்புதல் பெற்றுத்தான் கருணாநிதி இவ்வாறு செய்தாரா? என்ற கேள்வியும் எழுகிறது. ஏனெனில் தமிழ்ப்போராளிகளுடனான உறவுகளை விருத்தி செய்ய புதுடில்லி முயலுமெனில் அதற்கு இத்தகைய சமிக்ஞைகள் உதவுமல்லவா?

மற்றும்படி, ஒரு குமரி ஆனந்தனின் எதிர்ப்போ, ஒரு சுப்பிரமணிய சுவாமியின் எதிர்ப்போ பொருட்படுத்தக் கூடியவை அல்ல. ஏனெனில் அவர்களால் கருணாநிதிக்கு எதிரான கருத்துக்களை தேசியமயப்படுத்த முடியவில்லை. தவிர, இலங்கைக்கு இந்தியத் துருப்புக்களை அனுப்பி வீணான தொரு போரிலீடுபடுத்தியதிற்கும், அவமானப்பட்டு நாடு திரும்பியதற்கும் இந்திரா காங்கிரசே முழுப்பொறுப் பாகும். அந்தக் குற்றவுணர்வினால்தான் இன்று நலிவுற்றிருக்கும் இந்திரா காங்கிரஸ் கத்துகிறது எனலாம்.

இந்திய தேசிய வாதத்தில் இந்தியத் துருப்புக்கள் செய்த 'தியாகங்கள்' 'சாகசங்கள்' போன்றவை பெரிய அளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. இலங்கையில் இந்தியத்துருப்புக்கள் கிட்டத்தட்ட 30 மாத காலம் போரிலீடுபட்டன. அதேசமயம் ஆகக்கூடியது 30 நாட்கள் தானும் பாகிஸ்தானுடன் இந்தியத் துருப்புக்கள் போரிலீடுபட்டிருந்திருந்தால் இந்தியத் தேசிய வாதமே திரண்டெழுந்து ஆவேசத்தோடு தங்கள் துருப்புக்களின் தியாகங்களையும் வெற்றிகளையும் கொண்டாடியிருந்திருக்கும். ஆனால் இலங்கையில் அவ்வாறல்ல. இங்கு இந்தியத் துருப்புக்கள் அமைதிப்படையாகவே வந்தன. எந்த மக்களைக் காபபாற்ற வந்ததாகச் சொன்னார்களோ அந்த மக்க

(11ஆம் பக்கம் பார்க்க)




14-04-90 ஆம் திகதி,
மானிப்பாய்
மருதடி விநாயகர்
பிரமோதூத வருடப் பிறப்பன்று, அடியார்க்கு அருள் வழங்கத் தேரோடி வீதி வரும் நாள்.

அபிமான பாவனையாளர்களுக்கு மில்க்வைற் உற்பத்திகளை மலிவு விலையில் விற்கவும், சேகரித்த மேலுறைகளுக்கு உரிய பரிசில்களை வழங்கவும்,
மில்க்வைற் வாகனம்
ஆலய வீதியில் தங்களைக் காத்திருக்கும்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

## வெளியீட்டு விழா

கவிஞர் பா. சத்தியசீலனின் அல்லைபிட்டிப்பதி அருளப்பர் அம்மானை. நூல் வெளியீட்டு விழா இம்மாதம் 22 ஆம் திகதி அல்லைபிட்டி பராசக்தி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. விழாவிற்கு உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் டிவகலாலா தலைமை தாங்குவார். செங்கை ஆழியான், சொக்கன், சோ. பதமநாதன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். சுவாமி ஜெயசீலன் அவர்கள் நூலை வெளியிட்டு வைப்பார்.

# சந்தர்ப்பவாதிகளும் 'சுயநிர்ணய உரிமை'யும்

சிவா சுப்பிரமணியம்

தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் சுயநிர்ணய உரிமை மிகவும் பிரதானமான ஒரு அம்சமாக உள்ளது.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படல் வேண்டும் என்பது, அனைத்துத் தமிழர் அமைப்புகளினதும் நிலைப்பாடு.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாக இடதுசாரிக் கட்சிகளும் கூறுகின்றன.

சிறிமாவோ அம்மையார் கூடச் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகக், கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரத்தின் போது கூறினார்.

உண்மையாகவே சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பவர்கள் யாரென்பதையும், சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகச் சந்தர்ப்பவாதத்துக்காகச் சொல்பவர்கள் யாரென்பதையும், தமிழ்பேசும் மக்கள் இனங்காண வேண்டியது அவசியம்.

சுயநிர்ணய உரிமை என்பது சுயமாக நிர்ணயிக்கும் உரிமை. அதாவது, தங்களுக்கான அரசியல் வடிவமைப்பு எவ்வாறானதாக அமைதல் வேண்டும் என்பதைத், தமிழ்பேசும் மக்களே தீர்மானிக்கும் உரிமை.

இத்தீர்மானம், பிரிந்து தனிநாடு அமைப்பதாகவும் இருக்கலாம், ஐக்கிய இலங்கையில் மாநில சுயாட்சியாகவோ, சமஷ்டியாகவோ, அல்லது வேறேதேனுமொரு வடிவத்தில் அமைவதாகவோ இருக்கலாம்.

இது புறநிலைத்தன்மைகளினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது.

கணவனிடமிருந்து விவாகரத்துப் பெறும் உரிமை மனைவிக்கு உண்டு. அதற்காக, அவள் கணவனிடமிருந்து பிரிந்துதான் வாழவேண்டும் என்பதில்லை. இஷ்டிக்கும் கணவனிடமிருந்து பிரிந்து வாழலாம்; அணைக்கும் கணவனுடன் இணைந்து வாழலாம்.

தமிழினம் சுயநிர்ணய உரிமையை எவ்வாறு பிரயோகிக்கும் என்பது, பெரும்பான்மை இனம் இம்சிக்கும் இனமாக நடக்கின்றதா அல்லது சமத்துவநிலையில் அணைக்கும் இனமாக நடக்கின்றதா என்பதிலேயே, தங்கியுள்ளது.

சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதென்பது, பிரிந்து செல்வதற்கான உரிமையையும் அங்கீகரிப்பதென்பதாகும். இதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை.

தமிழினம், தனது சுயநிர்ணய உரிமையைப் பிரிந்து செல்வதற்காகப் பிரயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படுமாயின், அவ்வாறு பிரயோகிப்பதற்கு ஒரு 'களம்' இருத்தல் வேண்டுமல்லலா?

அந்தக் 'களம்'தான் பாரம்பரியத் தாயகம்.

பாரம்பரியத் தாயகம் இல்லாமல் சுயநிர்ணய உரிமை அர்த்தமற்றது; செயற்பட முடியாதது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகச் சொல்பவர்கள், தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகத்தை அங்கீகரிக்க வேண்டும்; அத்தாயகம் எது என்ற தெளிவான வரையறையை முன்வைக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுபவர்கள், சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகச் சொல்லித் தமிழினத்தைப் 'பேய்க்காட்ட' நினைப்பவர்களே.

வடக்கு – கிழக்கு மாகாண இணைப்பு தொடர்பான சர்வசன வாக்கெடுப்புப் பற்றி, இடையிடையே பேசப்படுகின்றது. உண்மையாகவே சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பவர்கள் யாரென்பதை இனங்காண்பதற்கு, இதுவும் ஒரு சந்தர்ப்பம்.

சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாயின் பாரம்பரியத் தாயகத்தையும் அங்கீகரிக்க வேண்டும் என்பதை, மேலே பார்த்தோம்.

வடக்கு – கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகம். எனவே, அவை இணைந்திருக்க வேண்டுமா என்ற கேள்விக்கே இடமில்லை.

பாரம்பரியத் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளாதவர்களே சர்வசன வாக்கெடுப்பை ஆதரிப்பர். எனவே, இத்தகையோர் சர்வசன வாக்கெடுப்புப் பற்றிப் பேசுவதெல்லாம் கபட வார்த்தைகளே.

கிழக்கு மாகாண மக்கள் வடக்குடன் இணைய விரும்புகின்றார்களா என்பதை அறிய வேண்டும் என, இவர்கள் சிலவேளை கூறலாம். இது ஏற்புடையதல்ல. ஏற்புடையதாகக் கொள்வதானால், வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் இலங்கையின் மற்றைய பகுதிகளோடு இணைந்திருக்க விரும்புகிறார்களா என்பதை அறிவதற்கும் ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடத்தலாமல்லவா?

அடுத்தது குடியேற்றம்.

தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகம் தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்டது.

இத்தொடர்ச்சியை முறியடிப்பதற்காகத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ் மக்களின் தொடர்ச்சியான தாயகத்தின் நடுவிலே சிங்களப் பிரதேசங்களை உருவாக்குவதன் மூலம் தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகக் கோட்பாட்டை மறுதலிப்பதே. இக் குடியேற்றக் கொள்கையின் நோக்கம். இக் கொள்கையின் பாதக விளைவை 09-03-1990 இல் வெளியான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 15/90 இலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அரசாங்க நியமனங்கள் இன விகிதாசார அடிப்படையில் செய்யப்படல் வேண்டுமெனக் கூறும் இச் சுற்றறிக்கையில். திருகோணமலை மாவட்ட இன விகிதாசாரம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| சிங்களவர் | 35.6% |
| இலங்கைத் தமிழர் | 32 5% |
| இலங்கை முஸ்லிம்கள் | 29 1% |
| இந்தியத் தமிழர் | 2.0% |
| மலேயர் | 0.3% |
| பறங்கியர் | 0.4% |
| ஏனையோர் | 0 1% |
| மொத்தம் | 100% |

சுயநிர்ணய உரிமையை உண்மையாகவே அங்கீகரிப்பவர்கள், தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயக உரிமையைப் பாதிக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்தாக வேண்டும்.

தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகத்தை ஏற்றுக் கொள்ளாமலும், அத் தாயக உரிமையை மறுதலிக்கும் சல நடவடிக்கைகளையும் எதிர்க்காமலும் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசுவோர், சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை வைத்துச் சந்தர்ப்பவாத அரசியல் நடத்துபவர்களே.

# வருஷப் பிறப்பும் மனுஷப் பிறப்பும்

கபிலர்

பிரமோதூத வருஷம் சனிக்கிழமை பிறக்கப்போகின்றது. இந்த வருஷம் நன்மை தருமா? அல்லது தீமை செய்யுமா? என்று பலர் ஜோதிட பலன் பார்க்க ஆவலாய் உள்ளனர்.

மாதங்களின் வரிசையில் நான்காவதாக வரும் சித்திரை மாதத்தின் முதல் நாளை வருடத்தின் தலை நாளாகக் கண்டு தொட்டுக் கொண்டாடி வரும் பண்பாடு தமிழரிடையே இருந்துவருகின்றது இலங்கையில் சிங்களமக்களும் சித்திரை வருடப் பிறப்பை விமரிசையாகக் கொண்டாடிவருகின்றனர்.

சித்திரை என்றுகூறும்போது ஒரு சித்திரம் வண்ணமுடன் தோன்றும் உணர்வு உண்டாகிறது. அவ்வண்ணமே அந்த மாதத்திற்கும் ஒரு தனிச் சிறபபு இருக்கிறது.

சித்திரை மாதப்பிறப்போடு வசந்தகாலம் ஆரம்பமாகின்றது. புலவர் கவிதைகளிலும் காவியங்களிலும் களிநடம் புரியும் வசந்தகாலத்தில், இயற்கை அன்னை இளந்தளிராடை உடுத்தி, அழகிய மலர்களைச்சூடி காய்கனிகளை அணிகலன்களாக்கி எழிற்கோலத்தில் காட்சியளிப்பாள். "மாதங்களில் நான் மலர் சான்ற இளவேனில்" என்று கீதையில் கண்ணன் அருளிய இனிய நலன்கள் பொருந்திய இன்னிளவேனில் ஆரம்பமாகும் சித்திரையில் பேரெழிலை; பேருண்மையை; பேரின்பத்தைக் கண்டு அதனை வரவேற்று திருநாளாகக் கொண்டாடத் தொடங்கிய பண்பாடு போற்றுதற்குரியது.

அந்தப்பண்பாட்டின் அடிப்படையிலே வருடப்பிறப்போடு, வாழ்க்கையில் மனிதனும் ஒரு பிறப்பை எடுத்து தன்னைப் பண்படுத்தி வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அதுவே வருடப் பிறப்பைக் கொண்டாடுவதன் தத்துவப் பொருள். வருடப் பிறப்பு மாத்திரமல்ல, எல்லா மதத்தவர்களதும் திருநாட்களும் இந்த அடிப்படையிலே தான் அமைந்திருக்கின்றன.

மனிதன் பிறந்து உண்மைப் பொருளை உணராது உழலும் வாழ்வு ஒரு பிறவி. அவன் உண்மைப பொருளை உணர்ந்து வாழும் வாழ்வு மறு பிறவி. இந்த உண்மைப் பொருளை உணரும் நிலை உலகில் கிட்டிவிட்டால் மனிதப் பிறவி கூட எனக்கு வேண்டும் என்று ஆசைப்பட்டார் ஒரு மெய்யடியார்.

இத்தகைய மனிதப் பிறவிகளாக நாம் வாழ்ந்தால் பிறக்கின்ற வருடத்தால் நாட்டிற்கு நன்மை வருமா, தீமை வருமா என்று ஏங்கும் நிலையே ஏற்படாது.

தீமைக்கும் நன்மைக்கும் காரணர் மனிதர்களே. வருஷம் அல்ல. அவர்கள் பூரணர்களாக வாழ்வேண்டும். மனிதனுடைய பிறப்பின் இலட்சியம் வாழ்விலே புதிய பிறவி எடுப்பதாக இருக்க வேண்டும். விலங்குகள், பறவைகள் பிறக்கின்றன வாழ்ந்து இறக்கின்றன. அதுபோல மனிதனும் பிறந்து இறக்கக் கூடாது. இறந்தாலும் வாழவேண்டும். அது எப்படி? களங்கமில்லா அன்பு செய் சத்தியத்தோடு வாழ் என்கிறார்கள் அத்தகைய வாழ்விலே மாறாத இன்பத் தினைத் திளைத்த அனுபூதியாளர்கள்.

வருஷப் பிறப்பிற்கு மறுநாள் வரும் உயிர்த்த ஞாயிறு இதற்குச் சாட்சி கூறுகிறது. அன்பைச் சொரிந்து சத்தியத்தோடு வாழ்ந்த யேசுநாதரை ஆணவக்காரரால் அழிக்க முடியவில்லை. அவர் வாழ்வு உலகிற்கு வழிகாட்டிக்கொண்டு இருக்கிறது.

ஆனால் உலகில் பெரும்பாலோர் சமய உண்மை பற்றிப் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள் சமய நிறுவனங்கள் அனைத்தும் ஆன்மீகத்தை வளர்க்க அரும்பாடுபட்டு பணத்தை வாரி இறைக்கின்றன. கடவுட் கொள்கையை ஏற்றுக் கொள்பவர்கள் பெரும்பான்மையானவர்களாக உலகில் இருக்கின்றனர், சமயப் பெருநாட்கள் சிரத்தையோடு கொண்டாடப்படுகின்றன, ஆனால் உலகில் பயங்கரங்களும் அமைதியின்மையும், யுத்த நெருக்கடிகளும் கொடிய நோய்களும் ஏன் அதிகரித்து வருகின்றன?

கடவுளை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் கடவுள் எமக்கு அருளிய வாக்குகளைப் பலரும் ஏற்று அதன்படி நடக்க விரும்பவில்லை. ஆனால் மற்றவர்களை ஏற்று நடக்கும்படி பிரசங்கிக்கிறார்கள். அழகான பிரமாண்டமான ஆலயங்களைக் கட்டுகிறார்கள். ஆனால் உள்ளங்களைப் பாழடைந்து இருள்சூழ விட்டுவிடுகிறார்கள்.

புது வருடத்தையோ அல்லது புனித நாட்களையோ பெரும்பாலோர் கொண்டாடி வரும் பான்மை வாழ்நாள் முழுவதும் செய்யாத பாவங்களையெல்லாம் அன்றைக்கே செய்து களிப்பதாக அமைகின்றது. அவற்றைச் செய்து நாம் வருஷத்தை வரவேற்றால் வருஷமும் அந்தக் கோலத்துடன்தான் நம்மிடம் வரும்.

புது வருடம் என்பதற்காகப் புத்தாடை அணிவதும், சமய வழிபாடுகளில் ஈடுபடுவதும் தானங்கள் செய்வதும் சுய நன்மையின் பொருட்டுச் செய்யும் சடங்குகளாகவே அமைகின்றன. அவையும் அன்றைய தினம் மட்டுமே. இவை எமது வாழ்வோடு ஒட்டியதாக, தூய உள்ளத்திலிருந்து பிறப்பதாக அமையவேண்டும். எனவே உள்ளங்களின் குறைபாடுகளை உதறியெறிந்து. அன்பு வழியில் மனிதப் பிறவியின் பயனை அடைய வருஷப் பிறப்பின் அர்த்தத்தையும், வாழ்வின் அர்த்தத்தையும் விளங்கி அதன்வழி வாழ முயல்வோமாக.




# சென். ஜோன்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி கிரிக்கட் அணித்தலைவர்களுடன் ஒரு சந்திப்பு

சந்தித்தவர்கள்: ஜி. எஸ். சவரிமுத்து
ஆர். ஜெயதேவன்

நீண்டகால இடைவெளிக்குப்பின் (5 வருடம்) யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மிகமுக்கியமானதும், இலங்கையில் 2 ஆவதாக மிகப் பெரியதுமான கிரிக்கட் போட்டி ஒப்பேற்றி முடிக்கப் பட்டுள்ளது! பலரும் எதிர் பார்த்ததுபோல், பலம் கொண்ட சென். ஜோன்ஸ் அணியே வெற்றிபெற்றுள்ளது. அனுபவமும் பயிற்சியும் குறைந்த மத்திய கல்லூரியினரும் சளைக்காமல் ஆடினார்கள். இறுதியாக 1984 இல் நடந்த போட்டிக்கும், தற்போது 1990 இல் நடந்த போட்டிக்கும் இடையே ஏராளமான வேறுபாடுகளைக் காணக்கூடியதாக இருந்தது. இரு கல்லூரிகளின் அணித்தலைவர்களையும் பேட்டி காண்பதன் மூலம், யாழ்ப்பாணக் கிரிக்கட் நிலைமைகளை உங்கள் முன் வைக்கின்றோம். சென். ஜோன்ஸ் உப அதிபரின் அனுமதியுடன் அணித்தலைவர் சதீசனைப் பேட்டி காண்கிறோம்.

(1) இவ்வாட்டத்தில் இனிங்சால் வெற்றி பெறக் காரணம் உங்கள் அணியின் வலுவான திறமையா? அல்லது மத்திய கல்லூரி அணியின் பலமின்மையா?

☐ மத்திய கல்லூரி அணியின் பலமின்மை என்று சொல்வதற்கில்லை; எமது திறமையினாலேயே இப்போட்டியில் வெற்றி பெற்றோம்.

(2) கடந்த ஆட்டத்துக்கும் (1984) இந்த ஆட்டத்துக்குமிடையே என்ன வேறுபாட்டைக் காண்கிறீர்கள்?

☐ வீரர்களிடம் உடல், உளவளர்ச்சிக் குறைவை நேரடியாகக் காணக்கூடியதாக உள்ளது. அன்று பனையளவில் இருந்த வீரர்கள், இன்று வடலியளவிலேயே இருக்கின்றார்கள். வீரர்களுக்கு உளவளர்ச்சிகூட குறிப்பிடத்தக்க அளவிலே இல்லை. சுருக்கமாகக் கூறுவதென்றால், வீரர்களின் தரத்தில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

(3) அண்மையில் வெளிவந்த 'கிறிஸ்ரியன் வேர்க்கர்' என்ற சஞ்சிகையில், "கொழும்பில் உள்ள கல்லூரிகளில் மாணவர்கள் வெற்றி பெறுவதற்காக மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிறார்கள்" என்ற குற்றச்சாட்டைக் காணக்கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் நிலைமை எவ்வாறு உள்ளது?

☐ கிரிக்கட்டின் தரம் என்னவோ யாழ்ப்பாணத்தில் குறைவு தான். ஆனால், விளையாட்டு உணர்வு என்பது மாணவர் மத்தியிலே உள்ளது. அதனாலேதான் இந்தப் போட்டியை நடத்தக்கூடியதாக இருந்தது.

(4) நீங்கள் கடந்த வருடங்களைப்போல சிறப்பாக ஆடவில்லையென்று தெரிகிறது. இதற்கு, தலைமைத்துவம் ஒரு சுமை என்று எண்ணுகிறீர்களா?

☐ அப்படி எண்ணவில்லை. இம்முறை நான் குறைவாகவே பயிற்சி எடுத்தேன். 'இலங்கை இளைஞர் அணிக்' காக உதைபந்தாட்டப் பயிற்சிகளில் ஈடுபட கொழும்பு செல்லவேண்டி இருந்ததால், இது ஏற்பட்டது.

(5) யாழ்ப்பாணத்தில் நிலைமைகள் சுமுகமாக இல்லாதிருந்தும்கூட, உங்கள் கல்லூரியினால் ஒவ்வொரு வருடமும் தரமான ஒரு அணியை உருவாக்கக்கூடியதாக இருந்துள்ளது. இதன் ரகசியம் என்ன?

☐ (சிரிக்கிறார்) ரகசியம் என்று பெரிதாக ஒன்றுமில்லை. பயிற்சிதான் எல்லாவற்றிற்கும் காரணம். எங்களுக்கு திரு சூரியகுமார் சிறந்த பயிற்சிகளைத் தருகிறார்; உபகரணங்களும் வழங்கப்படுகின்றன. இதுவே காரணம்.

மத்திய கல்லூரி அணித் தலைவர், முகுந்தனையும் சந்தித்தோம்.

(1) இந்தப் போட்டி ஏன் வருடாவருடம் உங்கள் கல்லூரியிலேயே நடைபெறுகிறது.

☐ மத்திய கல்லூரி மைதானம் அளவில் பெரியது. ஆனால் சென். ஜோன்ஸ் மைதானம் அளவில் சிறியதாக இருப்பதுடன், கல்லூரிக் கட்டிடங்களுக்கு அண்மையிலும் அமைந்துள்ளது. பார்வையாளர்களால் இடையூறுகள் வரலாம் என்பதனாலேயே, இது எங்கள் கல்லூரியில் நடக்கிறது.

(2) உங்கள் தோல்விக்கு முக்கிய காரணம் என்ன?

☐ கிரிக்கட்டுக்கு மிக முக்கியமான ஒன்று பயிற்சி. எங்கள் மைதானம் சுடுகாடாகக் கூட இருந்தது. இதனால், எம்மால் வேண்டியளவு பயிற்சிகளைப் பெறமுடியவில்லை. இதுவே முக்கிய காரணம்.

(3) யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை, பார்வையாளர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

☐ தாம் தாம் சார்ந்து நிற்கும் அணி வெற்றி பெற்றால் போதும் என்று எண்ணுபவர்கள். எமது போட்டியில்கூட இதைக் காணக்கூடியதாக இருந்தது. எமது தோல்வியை முன்வைத்து கைகலப்புகள் கூட உருவாக இருந்தது. இந் நிலையை மாற்றியமைத்து, பார்வையாளர்கள் எப்போதும் விளையாட்டுணர்வுடன் (Sportive Spirit) இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

(4) 145 ஓட்டங்கள் எடுத்துச் சாதனை புரிந்த சுரேன்குமாரைப் பற்றி......?

☐ அவர் நன்றாக ஆடினார். எமது பந்துவீச்சு தரக் குறைவாக இருந்ததாலேதான் இது நடந்ததென்று கூறமுடியாது. அவரிடம் இருந்த இயல்பான ஆற்றல், வெகு சிறப்பாக ரசிகர்முன் அரங்கேற்றப்பட்டது. இவர் போன்ற வீரர்கள் சர்வதேசத் தரத்துக்கு வரக்கூடியவர்கள். ஆனால், சுரேன்குமார் யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார்; அவர் யாழ்ப்பாணத்தவர் ...!!

(5) இப்போட்டி நடைபெறுவதையொட்டி டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளியான கட்டுரையில் உங்கள் அணி பற்றிய தகவல்கள் வெளிவரவில்லையே?

☐ வீரர்களின் படங்கள் மட்டுமே கேட்கப்பட்டன; வேறு எந்த விபரங்களையும் அவர்கள் கேட்கவில்லை.

(6) விபரங்களைத் தரமுடியுமா?

ஆம் என்று கூறிய முகுந்தன், எமக்குத் தந்த விபரங்கள் சிலவற்றை இங்கு தருகிறோம்:

☐ பந்து வீச்சில், அருணோதயன் மிகக்கூடியதாக 15 விக்கட்டுகளையும்; முகுந்தன், பிரபாகரன் ஆகியோர் தலா 12 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் முகுந்தன் 162 ஓட்டங்களையும் நிச்மண்ட் 138 ஓட்டங்களையும், தாம் ஆடிய 5 கல்லூரி ஆட்டங்களிலிருந்தும் பெற்றனர்.

இரு அணிகளிலும் இளையவரே பங்குபற்றினர்கள் என்பது பற்றி இரு அணித்தலைவர்களிடமும் கேட்டபோது, "கிரிக்கட்டில் இருந்து பெறும் பயன்களைப்பார்க்கிலும், க.பொ.த.ப. (உ/த) பரீட்சை எழுதி பல்கலைக்கழகம் புகுதல் வாழ்க்கைப்படகை ஓட்டுதற்குப் பெரிதும் உதவியாக இருக்குமென இவர்கள் எண்ணுகிறார்கள். நாமும் அப்படித்தான்" என்றனர்.

கிரிக்கட்டுக்கென்று அரசாங்கம் வழங்கிவரும் உதவிகள் வெகுவாகக் குறைந்து விட்டன என்பதையும் இவர்கள் குறிப்பிட்டனர். வீரர்கள் காட்டும் அக்கறைக்குறைவுக்கு, அரசாங்கம் காட்டும் அக்கறைக் குறைவே காரணம் என்பதைக் குறிப்பிட்ட இவர்கள், "சர்வதேசக் கிரிக்கட் போட்டிகளுக்குச் செல்லக்கூடிய வீரர்கள் பலர் இருந்தும், அவர்கள் இலங்கை அணியின் தகுதிகாண் பயிற்சிகளுக்குக்கூட அழைக்கப்படுவதில்லை; அழைக்கப்பட்டாலும் கவனிப்பாரற்று விடப்படுகிறார்கள்" என்று கூறினார்கள்.

ஆகவே, அரசாங்கம் உரிய சந்தர்ப்பத்தை வழங்கினால், வீரர்களும் இதில் கூடிய அக்கறை காட்டுவர்; யாழ்ப்பாணத்தில் கிரிக்கட்டின் தரமும் உயரும். உரியவர்கள் முயற்சியெடுத்து, இதனைச் செயல்நிலைக்குக் கொண்டுவருதல் அவசியமாகும். வீழ்ந்திருக்கும் கிரிக்கட் தரம் உயர இனியாவது வழி பிறக்கட்டும்! ☐

# வனவிலங்கு பாதுகாப்பு நிலையங்களுக்கு ஆபத்து

என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கிறார்கள் வனவிலங்கு பாதுகாப்பு இலாகாவினர். அத்துமீறிக் குடியேறுபவர்களாலும், போராளிகளாலும் வனவிலங்குகளுக்கும் பறவைகளுக்கும் தோன்றியுள்ள ஆபத்தைச் சமாளிக்க முடியாது திணறுகின்றனர்.

வனவிலங்குப் பாதுகாப்புப் பகுதிகளைப் பாதுகாக்கப் போதிய காவலர்களும் அதிகாரிகளும் அவர்களிடமில்லை. அவர்களிடமிருந்த கொஞ்ச ஆயுதங்களில் ஒரு பகுதியைப் போராளிகள் பிடுங்கிவிட்டனர்; மிகுதியை அரசாங்கம் திருப்பி வாங்கி விட்டது. வில்பத்து வன அதிகாரிகளிடமிருந்தும போராளிகள் ஆயுதங்கள் சிலவற்றைப் பறித்துவிட்டனர். அத்துடன், சில அதிகாரிகளையும் கொலை செய்துவிட்டனர். குமண பாதுகாப்பு வனத்தில் அண்மையில்தான் சில அதிகாரிகள் கொலை செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்த ஆயுதங்களும் பறிக்கப்பட்டன.

இப்பொழுது வனவிலங்குக் காவலர்களும், அதிகாரிகளும் வனத்திற்குள்ளே போவதில்லை. அடர்ந்த நடுக்காடுகளில் போராளிகள் முகாம்களை அமைத்துள்ளனர். நவீன ஆயுதங்களை வைத்திருக்கும் போராளிகள் இருக்கும் பக்கம் எவரும் தலை காட்டுவதில்லை. வில்பத்து, யலகாடுகளில் எல்லாம் போராளிகள் நடமாட்டம் அதிகம்.

பாதுகாப்பு வனங்களுக்குப் போராளிகள் ஏற்படுத்தும் ஆபத்தைவிடப் பெரிய அழிவை அத்துமீறிக் குடியேறுபவர்கள் ஏற்படுத்துகிறார்கள். எல்லாப் பாதுகாப்பு வனங்களிலும் அத்துமீறிக் குடியேறுபவர்களின் தொல்லை பொறுக்க முடியாத அளவு பெருகிவிட்டது.

அண்மையில் தேசிய பாதுகாப்பு வனமாகப் பிரகடனம் செய்யப்பட்ட வெள்ள பிரதேச தேசிய வனத்தில், அத்துமீறிக் குடியேறுபவர்களின் தொல்லை அதிகம்.

மட்டக்களப்புக்குப் போகும் பாதையிலுள்ள மன்னம்பிட்டியப் பகுதியில் இந்தத் தேசிய வனம் உள்ளது. வெள்ளக் காலங்களில், யானை உட்பட பல வனவிலங்குகள் வெள்ளத்தினுள் ஆழ்ந்துவிடும் பகுதியிலிருந்து மேட்டு நிலத்திற்குச் செல்ல வழி செய்யவே, இந்தப் பகுதி தேசிய வனமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. 1984 ஆம் ஆண்டு செய்யப்பட்ட அப்பிரகடனத்தின்படி அதன் எல்லைகள் மகாவலியின் வடகரையிலுள்ள யக்குரே முதல் சோமவதி தேசிய வனத்தையும், வெஸ்கொமுவ தேசிய வனத்தையும் தொடுக்கிறது. அதன் மொத்த நிலப்பரப்பு 66.9 சதுர கிலோமீற்றர்கள். இன்று அந்தப் பகுதியில் பலர் அத்துமீறிக் குடியேறி மண்வீடுகளைக் கட்டியுள்ளனர். வீடு கட்டுவதற்குத் தேவையான மணலை மன்னம்பிட்டி பாலத்திற்கருகிலிருந்து அள்ளுகிறார்கள். காடுகளை அழித்து புகையிலை பயிரிடுகிறார்கள்.

அவர்களுக்கு அரசியல் ஆதரவு அதிகம் இருப்பதனால் வெளியேற்றவும்முடியவில்லை அவர்களில் அதிகமானோர் கிழக்கு மாகாணத்திலிருந்து வந்து குடியேறியவர்கள். அவர்களை எழுப்பப்போனால் சண்டைக்கு வருகிறார்கள். "வீடு வாசல்களை இழந்து இங்கு வந்து குடியேறியுள்ளோம். இங்கேயிருந்தும் எங்களை விரட்டி அடிக்கப் பார்க்கிறீர்களே" என்று கூறுகிறார்கள்.

அந்தப் பகுதியில் ஒரு செங்கட்டித் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகக் கூறுகிறார் வனவிலங்கு, இயற்கைப்பாதுகாப்புச்சபைத் தலைவர் டொக்ரர் ரஞ்சன் பெர்னான்டோ. அத்தொழிற் சாலையில் 300 பேர் வேலை செய்கிறார்கள். களிமண் தோண்டுவதோடு, காட்டு மரங்களைத் தறித்து விறகாகப் பாவிக்கிறார்கள். இத்தொழிற்

(9 ஆம் பக்கம் பார்க்க)



# மார்க்சியமும் பெண்நிலைவாதமும்: சில பிரச்சினைகள்

வ. கீதா

இந்தியாவின் மஹாராஷ்டிரா மாநிலத்தில் சமீபத்தில் நடந்தவொரு சம்பவம்: ஆதிவாசி மக்கள் மத்தியில் பணிபுரிந்துவந்த ஒரு பெண்; பம்பாய் நகரவாசி. அவள் கோரமான பலாத்காரத்திற்கு உள்ளானாள். அவளைப் பலாத்காரப்படுத்தியவர்கள் ஒரு கொம்யூனிஸ்ட் கட்சியின் தொண்டர்கள். அவர்களின் குரோதத்திற்கான காரணம்: அந்தப் பெண், ஆதிவாசி மக்கள் மத்தியில் இயங்கி வரும் ஒரு இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்தவள். இந்த இயக்கம் பல வருடங்களாக ஆதிவாசிகள் மத்தியில் பணிபுரிந்து வந்துள்ள கொம்யூனிஸ்ட் கட்சியின் பெயர்போன அரசியல் செல்வாக்கிற்குச் சவால்விடும் அளவிற்குக் கடந்த பத்து வருடகாலத்தில் வளர்ந்துள்ளது. அந்த இயக்கத்தின் ஊழியர்களைப் பயமுறுத்தி, மிரட்டி அந்த இயக்கத்தின் ஆதரவாளர்களை— அதாவது சாதாரண ஆதிவாசி மக்களை—பல சமயங்களில் வன்முறையால் தாக்கியும் உள்ளனர். கம்யூனிஸ்ட் கட்சியின் தொண்டர்கள். இந்த வகையில், அந்த இயக்கத்தின் பெண் ஊழியர் ஒருவரைப் பலாத்காரம் செய்வதன் மூலம், தங்களது ஆணாதிக்க வெறியைக் கொண்டு அங்குள்ள அரசியல் நிலைமைகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணினர் போலும்!

மஹாராஷ்டிரா சம்பவத்தை நாம் புரிந்து கொள்வது எப்படி? அந்தக் காடுகளில் நடந்த கொடூரம் தனிமனிதர்கள் சிலரின் காமத்தின் சொரூபமா? அவர்களின் கட்டுக்கடங்காத பொறாமை தூண்டிய வெறியின் விளைவா? கொம்யூனிஸக் கோட்பாடுகளை எந்தளவிற்கு இத்தொண்டர்கள் உள்வாங்கியிருந்தனர்? அல்லது கொம்யூனிஸ்ட் கோட்பாடுகளுமே ஆணாதிக்க முத்திரை பதிக்கப்பட்டவைதானா? மார்க்சியம் ஒரு ஆண்வழிச் சிந்தனை தானா?

இக்கேள்விகளுக்கான பதில்கள், மார்க்சியம், பெண்நிலைவாதம் ஆகிய இரண்டிற்குமிடையே நிலவும் நெருடலான, சிக்கலான உறவைப் பற்றிய நமது புரிதல்களைச் சார்ந்தவையாகவே இருக்க முடியும்.

## மார்க்சியரின் கூற்று

மார்க்சியர்கள்– நாம் இங்கு பொதுமைபடுத்தி, ஏன் சிலசமயங்களில் கொச்சைப்படுத்தியும் பேச வேண்டியிருக்கும் — கூறுவதாவது:

முதலாளி உற்பத்தி முறை இலாபத்தை இலக்காகக் கொண்டே செயல்படுகிறது. இவ்வுற்பத்தி முறை சாத்தியப்படுத்தியுள்ள சமூக உறவுகள், உற்பத்தி உறவுகளாலேயே வடிவமைக்கப்படுகின்றன. முதலாளியத்தின்கீழ் ஆண், பெண் உறவுகளுங்கூட, இவ்வாறுதான் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இவ்வுறவுகளை ஒழுங்கமைக்கும் சாதனமாக விளங்குவது குடும்பம். உற்பத்தி உறவுகளை – முதலாளி, தொழிலாளி என்ற உறவே இவற்றில் பிரதானமானது– மறுஉற்பத்தி செய்யக்கூடிய குடும்ப அமைப்புகள் பெண்ணை ஆணுக்கு அடிமையாக்குகின்றன. பாலியல் உழைப்பின் பிரிவினையானது (Sexual division of labour) பெண்ணைக் குடும்ப உழைப்பில் ஈடுபடுத்தி, அவளுடைய ஆன்மீக மற்றும் அறிவு வளர்ச்சியைக் குலைக்கிறது: குடும்ப எல்லைகளுக்குட்பட்டு உழலும் பெண் பொருளாதார சுதந்திரமற்றவளாய் வாடுகிறாள். பிள்ளைபெறும் யந்திரமாகவே பெண்சமுதாய உற்பத்தியில் பங்கேற்கிறாள் என்றாலும், முதலாளியத்தின் கடையற்ற இயக்கம் விவசாயிகளையும், சிறு உற்பத்தியாளரையும் கூலிக்கு உழைக்கும் பாட்டாளிகளாக மாற்றியது போல், பெண்களையும் கூலிவேலைக்கு இரையாக்கிவிடும். கூலி உழைப்பில் ஈடுபடும் பெண் ஓரளவு பொருளாதார சுதந்திரம் வாய்த்தவளாகிறாள். இனி, அவள் வர்க்கப் போராட்டத்தில் தனது பாட்டாளித் தோழனுக்குத் தோள் கொடுத்து புரட்சிக்காக உழைக்க வல்லவளாகிறாள்; விடுதலை மோட்சம் பெறக் காத்திருக்கிறாள். புரட்சி வெடித்த தருணம் அவளது விடுதலையும் நிறைவு பெறும்.

## இரட்டைச் சுமை

பெண்நிலைவாதிகள் இவ்வாதங்களை ஒட்டுமொத்தமாக ஏற்பதில்லை. அவர்கள், பெண்களின் வரலாற்று அனுபவங்களைச்சாட்சியங்களாகக் கொண்டு கூறுவதாவது: சமூக உற்பத்தியில் பெண்கள் இன்று பெருமளவில் ஈடுபட்டு உள்ளனர் என்பது என்னவோ உண்மைதான். ஆனால் பெண் உழைப்பாளர்களுக்கு ஆண்களை விடக் குறைந்த ஊதியம் வழங்கி அவர்களை அதிக நேரம் உழைக்கச் செய்கின்றனர் முதலாளிகள். இந்தியா போன்ற நாடுகளில் இவ்வுண்மை தெட்டத்தெளிவாகவே நமக்குப் புலனாகிறது தவிரவும், வீட்டுக்கு வெளியே சென்று, 'குடும்ப வரம்புகளை'க் கடந்து உழைக்க வருபவள், மாலையில் வீடு திரும்பியவுடன். குடும்ப அலுவல்களில், மும்முரமாக முக மலர்ச்சியுடன் தன்னை ஆழ்த்திக்கொள்ள வேண்டிய நிலை வேறு 'இரட்டைச் சுமை'யைச் சுமப்பவளாய் அவள் மூச்சு விடாது உழைத்தும், தனக்கென்று தனது வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியன பொருட்டு பணத்தையோ வேறு — செல்வங்களையோ வைத்துக்கொள்வதில்லை. குடும்பச் செலவுகளிலேயே அவளது கூலி கரைந்து விடுகிறது. இந்தவொரு சூழலில், தான் சம்பாதித்த பணத்தை தனது விருப்பப்படி பெருமையுடன் செலவு செய்யும் உரிமை, அவளிடத்தில் இல்லை. அந்த உரிமை, பெருமை குடும்பத் தலைவனுக்கே உரியது. பெண்களின் விடுதலை, அவர்கள உற்பத்தியில் பங்கேற்பதன் மூலம் மாத்திரம் ஏற்படக் கூடிய ஒன்றல்ல. கைநிறைய சம்பாதிக்கும் மத்தியதர வர்க்கப் பெண்ணுக்குக்கூட இந்த தந்தைமைச் சமுதாயத்தில் (Patrimonial Society) விடுதலைக்கான சாத்தியப்பாடுகள் மிகக்குறைவே. ஆண்வழிச் சிந்தனைகளும் சித்தாந்தங்களும் பெண்ணை ஒரு பொருளாக கருவியாகப் பாவிப்பதனாலும். ஒருபெண்குடும்பவாழ்க்கையை மேற்கொண்டால்தான் அவள் ஒரு முழுமையான மானுடஜீவியாக மதிக்கப்படுவதாலும் அவளது பொருளாதாரசுதந்திரம் அவளுக்கு சாதகமாக இருப்பதில்லை. மாறாக வர்க்கங்களாகப் பிளவுபட்டுள்ள சமூகத்தில் அவளும் ஒரு வர்க்க ஜீவியாக வாழத் தொடங்கிறாள். பெண்ணாகஇருப்பதால் அவள் படும் துயரங்களுக்கு ஈடாக முதலாளியம் அவளுக்கு வர்க்கவுணர்வை வழங்குகிறது; குடும்ப வாழ்வின்போலிச் சொகுசுகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது. பெண்ணின் உழைப்புச் சக்தி குடும்பத்தை இன்னும் சீரான முறையில் முதலாளிய உற்பத்தி முறையுடன் இணைத்துஇயக்க உதவுகிறது. பாட்டாளி மக்கள் ஒரு வர்க்கமாகத் திரண்டு புரட்சிகர செயற்பாட்டில் இறங்கியலும் என்பது உண்மைதான். ஆனால் வீட்டுக்கு வெளியே சென்று உழைப்பவர்களாயினும், மற்றநேரங்களில் தத்தம் வீடுகளில் முடங்கிக் கிடக்கும் பெண்கள் எவ்வாறு ஒன்று திரள முடியும்? அவ்வாறே, பெண்கள் தமது ஜாதி, மத, வர்க்க வேறுபாடுகளை மறந்து, ஒன்றுகூடி சங்கம் அமைக்கவோ, இயக்கத்தில் இணையவோ முயன்றாலும் ஆண்களின் குரோதத்தையும் வன்முறையையும், கேலிப் பேச்சையும், ஆபாச நடத்தையையும் அல்லவா அவர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது? உழைக்கும் மக்களை ஒன்று திரட்ட விரும்புவதாய்க் கூறும். இடதுசாரியினர்கூட பெண்களை, உழைப்பாளிகளாக மட்டுமே காண்கின்றனர். பெண்களாக இருப்பதால் அவர்கள் சந்திக்கவேண்டிய விசேஷப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அவர்கள் (பெண்கள்) சுயேச்சையாக சங்கம் அமைத்து இயங்க வேண்டியதன் அவசியத்தை, இடதுசாரியினர் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை. குடும்பங்களில் தொடங்கி பலவித மக்கள் அமைப்புகளிலும் விரவிக் காணப்படும் ஆணாதிக்கப் பார்வையை. உறவுகளை முறியடிக்க பெண்கள் அவ்வமைப்புகளுடன் ஒரு முரணான உறவையே கொண்டிருக்கவேண்டியிருக்கும் என்பதைக் காணாத இடதுசாரியினர், சுயேச்சையாக இயங்க விரும்பும் பெண்கள் அமைப்புகள் வர்க்கப் போராட்டத்தை மறுதலித்து செயல்படுவன என்ற தவறான நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர். இந்த கையில் பெண்களின் விடுதலை அவர்களைக் கட்டுப்படுத்தி ஒடுக்கியாளும் குடும்ப அமைப்புகள் முதலாக இவற்றைச்சாத்தியப்படுத்தும் தந்தைமைக் கட்டமைப்புகள் குறிப்பிட்ட சமூகத்தின் பொருளாதார. அரசியல் மற்றும் பண்பாட்டுக் கட்டமைப்புகள் இவற்றில் அடங்கும் - ஆண்வழிச் சிந்தனைகள் ஆகியன அற்றுப்போய் பழைய ஆதிக்க உறவுகளுக்குப் பதில் புதிய பரஸ்பர உறவுகள் ஏற்படுங்காலத்தில்தான் முழுமை பெறும்.

## வழமையான கூற்று

மேற்கூறிய பெண்நிலைவாதங்களினால் சலனம் அடையாத மார்க்சியர்கள், தங்கள் அரசியல் நிலைப்பாடுகளை விட்டுக் கொடுப்பவர்கள் அல்லர். அவர்கள் மேலும் கூறுவர்: புரட்சிக்குப் பிறகு குடும்பம் முதலான சகல அமைப்புகளும் சமுதாயமாக்கப்படும் ஆண், பெண் உறவு முறைகளும் சோசலிச உறவு முறைகளாக மாறியமையும். இம்மாற்றங்களுக்கான முன்நிபந்தனை: புரட்சி; புரட்சியின் பொருட்டுபாட்டாளி மக்களின் கூட்டுச் சக்திக்குக் கேடு விளைவிக்காத வண்ணம் பெண்கள் மார்க்சியக் கோட்பாடுகள் நடைமுறை ஆகியவற்றுடன் தமக்கிருக்கும் வேறுபாடுகளைக் களைந்தெறிந்து ஆண் தோழர்களுடன் இணைந்து போராட முன்வர வேண்டும் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் புரட்சியின் தீர்வுகளாகத்தான் இருக்க முடியும்.

பெண்நிலைவாதிகளுக்கு இந்த வாதங்கள் ஒன்றும் புதிதல்ல. வர்க்கப்போராட்டத்தில் பெண்கள் ஆண்களுக்கு இணையாகப் போராடியது வரலாற்று உண்மையாகியுள்ள போதிலும், போராட்டங்களுக்குப் பின் தோன்றிய விடியல் பெண்களின் பிரச்சினைகள் தீர வழிவகுத்ததில்லை என்பதை, அவர்கள் நன்றாகவே அறிவர்கள் தவிரவும்இடதுசாரியினர் கூறுவதுபோல் வேறுபாடுகளைக் களைந்தெடுத்தால் தம்மை வருத்தும் பிரச்சினைகளைப் பற்றிய போலித்தனமான புரிதல்களே சாத்தியம் என்பதையும் பெண்நிலைவாதிகள் அறிந்துள்ளனர். அவர்கள் இடதுசாரியினரிடத்தில் எதிர்பார்ப்பதெல்லாம் ஆணாதிக்கத்தைப் பற்றிய சுயவிமர்சனத்தைத்தான்.


## ஆணாதிக்கம் ஒரு விளக்கம்

ஆணாதிக்கத்தைப் பெண்நிலைவாதிகள் பலவாறு விளக்குவர்: தந்தைமைச் சமூகக் கட்டமைப்புகளை நெறிப்படுத்தும் ஆதிக்க உறவாகவும், இக் கட்டமைப்புகளின் ஒரு விளைவாகவும்; "பெண்களைப் பொருட்களாகப் பாவிக்கும் ஆண்பார்வையைச்சாத்தியப்படுத்தும் சித்தாந்தமாகவும்; "ஆண்மை" என்ற கருத்தாக்கத்தை நிராகரித்து இயங்கக் கூடிய அனைத்துவகைச் சிந்தனைகளையும் மறுதலித்து, தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முனையும் அதிகாரத்துவக் கருத்து வகையாகவும் பெண் நிலைவாத அகராதியில், இவ்வாறு ஒன்றோடு ஒன்று தொடர்புடைய பல அர்த்தங்களைச் சுமந்து செயல்படும் பதம்தான் ஆணாதிக்கம் என்பது: ஆணாதிக்கம், தந்தைமைச் சமூகம், ஆண்வழிச் சிந்தனை இக்கருத்தரங்கங்கள் வரலாற்றுப் போக்குகளைக் குறிப்பன. ஆண்களைப் பற்றிய அவர்களின் குணாம்சங்களை விளக்கும் சொற்கள் அல்ல இவை. ஆண்களைப் பற்றிய பொது "உண்மை"களை என்றென்றும்சாசுவதமான நிலைப்பாடுகளைவரையறுப்பவையும் அல்ல தந்தைமைச்சமூகத்தில் வாழும் பெண்களுங்கூட ஆணாதிக்க உணர்வுகளைப் பெற்றிருக்கலாம். மாமியார்-மருமகள் உறவுகளில் இவ்வுணர்வுகள் வெளிப்பாடு காண்பது வழக்கம். தாம் வாழும் சூழலில் "உண்மை" என்று கருதப்படுபவற்றை— இவை தம்மை இழிவுபடுத்திக் காட்டும் போதும் —பெண்களும் உண்மையாகக் கொள்வதை நாம் கண்கூடாக, நாம் வாழும் சமூகங்களில்காணலாம். உதாரணமாக, ஆண்வழிச் சிந்தனைகள் (நாம் முன்கூறியதுபோல) பெண்ணைப் பொருளாக, கருவியாகவே வரலாறுதோறும் பாவித்து வந்துள்ளன. பெண் சுகமளிக்கும், குழந்தை பெற்றுத் தரும் யந்திரம்; பெண்ணுக்கென்று ஒரு மார்க்கம் கிடையாது. தந்தை, கணவன், பின் பிள்ளை வழி நடக்கும் பொம்மைதான் அவள் என்பன போன்ற கருத்துக்களை ஏற்று வாழ்க்கை நடத்தும்பெண்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருப்போம். இந்தவகையில் ஆணாதிக்கத்தை இடதுசாரியினர் தம்மிடத்து கண்டறிந்து விமர்சிக்க வேண்டும் என்று பெண்நிலைவாதிகள் கூறுவதில் வியப்பேதும் இருக்க முடியாது.

(அடுத்த வாரம் முடியும்)

# கலைச்சாரல்

எஸ். திருநாவுக்கரசு என்றால் அவரைப் பலரும் அறியார். எஸ். ரி. அரசு அல்லது அரசர் என்றால் அறியாதார் அறியாதாரே. இவர் இலங்கையின் சிறந்த நாடக நடிகர்களிலும், நெறியாளர்களிலும் ஒருவர். சினிமா நடிப்பிலும் நெறியாளுகையிலும் அனுபவமுள்ளவர், சிறந்த ஒளிப்படக்கலைஞர். பரந்த அறிவும், ஆழமான அனுபவமும் உடையவர்; அதனால் அடக்கமுடையவராகிவிட்டார். பல்கலைகளிலும் தனக்குள்ள அறிவையும், நாடக அனுபவத்தையும் கொண்டு இங்கு ஒப்பனைக்கலை பற்றி எழுதுகிறார்.



# நாடகக் கலையும் ஒப்பனையும்

எஸ். ரி. அரசு

பயில்முறை நடிகர்கள் ஒப்பனைபற்றி அறியாதிருப்பதையிட்டுக் கூறப்படும் கண்டனங்கள் நியாயமானவையாகும். அவர்கள் மீது கூறப்படும் தவறுகள் அக்கறையீனத்தால் ஏற்படுபவையல்ல. ஒப்பனைப் பொருட்கள் பற்றிய பணிகள் பற்றியும், அவற்றின் நோக்கங்கள் பற்றியும் நடிகர்கள் அறியாதிருப்பதே கவலைக்குரிய விடயமாகும்.

## ஒப்பனை அவசியம்

ஒப்பனை அவசியம் என்பது பற்றி அனைவரும் அங்கீகரிக்கின்ற போதும், அது எதற்காக அவசியம் என்று கூறுவதில் பலதரப்பட்ட அபிப்பிராயம் நிலவுகிறது. சிலர் அதனை அரங்க மரபாக அங்கீகரிக்கின்றனர். ஏனையோர் அது வெறுமனே அழகு படுத்துவதற்கு உதவுவது என நம்புகின்றனர். பூசப்படும் உறுப்பு எடுப்பாக இருப்பதற்குச் செந்நிறமும், முதிர்ச்சியைக் காட்டுவதற்கு சுருக்கங்களும் அவசியம் என்று அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்.

பெண்கள் சாதாரணமாகதாங்கள் செய்யும் ஒப்பனையையும், மேடைக்குரிய ஒப்பனையையும் ஒன்றுக் கருத முற்படுகின்றனர். ஆனால் அவையிரண்டும் இரு துருவங்களாகும். நாளாந்த வாழ்க்கையில் நாம் செய்யும் ஒப்பனைகள் சாதாரண ஒளிக்கும், சூரிய ஒளிக்கும் போதுமானவை. ஆனால் அவை நவீன மேடை ஒளியமைப்பின் முன் பயனற்றவை.

ஒப்பனை செய்தலை சராசரி அறிவுள்ள எவரும் மேற்கொண்டு வெற்றி காணலாம். அதற்கு அவர் அதன் அடிப்படைத்தத்துவங்களை அறிந்தவராகவும் விடாமுயற்சியோடு அதைச்செய்ய ஆயத்தமாகவும் இருக்கவேண்டும். நாடகப் பிரதியைவாசித்துத் தெளிந்து, வரும் பாத்திரங்கள் எப்படி அமைய வேண்டுமென்பதை அறிந்து கொள்ளவேண்டும். கதாபாத்திரத்திற்கும் ஒப்பனைக்கும் உள்ள தொடர்பு பிரிக்கமுடியாதது.

மேடையிலே அமையப் போகும் ஒளியமைப்புக்கேற்ப ஒப்பனை அமைதல் வேண்டும்.

1. செறிவான ஒளியின் தாக்கத்தால் கலைந்து போகக்கூடிய தோற்றத்தைக் கலைந்து போகாமல் செய்வதற்காகவும்,

2. செயற்கை ஒளியின் மூலம் பாய்ச்சப்படுகின்ற நிற இயல்புகளை விரிவாகக் காட்டுவதற்காகவும்,

3. பல கோணங்களிலிருந்து பாய்ச்சப்படும் ஒளியின் மூலம் முகத்தில் ஏற்படவேண்டிய நிழலும் ஒளியும் அற்றுப் போகாது பாதுகாப்பதற்காகவும்,

பொருத்தமான ஒப்பனை செய்யப்பட வேண்டும்.

கதை வசனகர்த்தா, நெறியாளர், நடிகநடிகையர், இசையமைப்பாளர், ஒலி, ஒளியமைப்பாளர், மேடையமைப்பாளர், ஒப்பனையாளர் இன்னோரன்ன அனைவரினதும் கூட்டு முயற்சியே நாடகம். மேடையில் தோன்றுபவர்கள் தவிர, மேடையின் திரைமறைவில் இயங்குபவர்கள் பார்வையாளரின் கண்முன் காட்சியளிப்பதில்லை. நடிக நடிகையரே பார்வையாளரின் கண்முன் காட்சியளிக்கின்றனர். எனவே நடிக நடிகையரே நாடகத்திற்கு நாயகங்கள்.

நடிகர்கள் தங்கள் லாவகமான சொல்லாட்சியாலும் நடிப்புத் திறமையாலும் இரசிகர்களைக் கவர முயற்சித்தாலும், தாம் ஏற்று நடிக்கும் பாத்திரங்களின் தன்மைகளுக்கேற்ப வேடங்களைத் தாங்கிக் கொண்டாலன்றி இரசிகர்களைத் தங்கள்பால் கவர்ந்திழுக்க முடியாது.

ஒரு நாடகத்தின் முழு வெற்றியில் அந்த நாடகத்தில் தோன்றும் பாத்திரங்களின் பொருத்தமான வேடங்களும் சேர்ந்தே கணிக்கப்படும். எனவே ஒப்பனை நாடகத்திற்கு இன்றியமையாதது. ஒப்பனையை வெறும் பூச்சுக்களினால் மட்டும் கணிக்க முடியாது. ஆடையணிமணிகளோடு கூடி அவற்றோடு பூச்சும் சேர்ந்ததே ஒப்பனை. நெறியாளர் நாடகப் பயிற்சி ஆரம்பிக்கும் முன்போ அல்லது ஆரம்பிக்கப்பட்ட முற்பகுதியிலோ ஒப்பனையாளரையும் கலந்து, நடிகர்கள் தாங்க வேண்டிய வேடங்கள் பற்றி முடிவு செய்தல் வேண்டும். நடிகர்களுக்கும் அதுபற்றிய விளக்கமளித்தல் வேண்டும். போதிய அவகாசம் அளித்தாலே ஒப்பனையாளர் செவ்வனே செயற்பட முடியும். அநேகமான நாடகங்களில், மேடையேற்றப்படும் நாள் நெருங்கும்வரை அலட்சியமாக இருந்துவிட்டு கடைசி நேரத்தில், நடக்கப்போகும் நாடகம் பற்றிய எதுவித தகவலும் தெரியாத ஒரு ஒப்பனையாளரைக் கொண்டு ஒப்பனை செய்வதால், அவ்வொப்பனை சிறப்பாக அமையாது நாடகம் சோபையிழந்து விடுவதுண்டு.

## மரபு நாடகங்களில் ஒப்பனை

பழைய மரபு வழி நாடகங்கள் புராண இதிகாசங்களிலிருந்தே கதைகளைப் பெற்றவை. இரசிகர்களுக்கும் நன்கு பரிச்சயமானவையாய் அவை இருந்தன. ஒரு கதையே காலங்காலமாக நடிக்கப்பட்டு வந்ததால் மேடையமைப்பிலிருந்து ஒப்பனைவரை தொழிலாகக் கொள்ளப்பட்டிருந்தன.

ஒப்பனையாளருக்கு ஒவ்வொரு பாத்திர அமைப்பிற்கும் ஒப்பனை எப்படி அமைய வேண்டுமென்பது கைதேர்ந்த கலையாகவிருந்தது. பெருஞ் செலவு செய்து ஆடை அணிமணிகளையும் தாமே தயாரித்து வைத்திருந்தனர். பழைய கூத்துக்கள் பெரும்பாலும் திறந்த வெளிகளில் மாலை தொடக்கம் மறுநாட்காலைவரை நடைபெற்றன. ஒளி வசதி மிகக்குறைவு. தீப்பந்தங்கள், காலம் செல்லச் செல்ல பெற்றோமக்ஸ் போன்றவற்றின் ஒளியிலேயே நடைபெற்றன. ஆகவே நடிக நடிகையரின் உருவங்கள் துலக்கமாகத் தெரியும் பொருட்டு அதீதமான ஒப்பனைகளுடன் மேடையில் காட்சியளித்தனர்.

## சமகால நாடகங்களில்

மேற்கூறிய காலகட்டத்தின் பின், மண்டபங்களில் நடைபெற்ற நாடகங்கள் கூடச்சமீப காலம்வரை அதே முறையைப் பின்பற்றியே தொடர்ந்து நடைபெற்றன. சமகால நாடகங்கள் தற்கால சமூகப்பிரச்சினைகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டவை. அக்கதைகளில் வரும்நாடகப் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் பல தரப்பட்ட குணாம்சங்கள் கொண்டன. இத்தகைய நாடக பாத்திரங்கள் நமது நாளாந்த வாழ்க்கையில் நம் முன்னே நிஜமாகவே நடமாடிக்கொண்டிருக்கின்றன. நாம் ஒப்பனை மூலம் காணவிரும்பும் பாத்திரங்களுக்கு மேற்கூறிய பாத்திரங்களின் அமைப்பிலிருந்து சிறிது மிகைப்படுத்தி ஒப்பனை செய்யலாம்.

மனிதநேயமே உத்தம குணம். இக்குண விசேஷங்களினின்றும் விலக்கிச் செல்லும் செயற்படும் மனிதன் எல்லோரதும் வெறுப்புக்காளாகின்றான். நாடக பாத்திரங்களிடையே கருத்து மோதல் ஏற்படும் போது மனிதகுண விசேஷங்களை இழந்து வரும் பாத்திரங்களுக்கு ஏற்ப ஒப்பனை, குறியீடு தழுவியதாக அமைதல் நலம்.

## குணநலன்களுக்கு ஏற்ப

மனிதனுக்கும் விலங்கு, பறவை போன்றவற்றிற்கும் உள்ள ஒருமைப்பாட்டில் முக அமைப்பு ஒத்திருப்பது காணலாம். மனிதமுகத்தை விலங்கு, பறவைபோன்ற முகச்சாயலுக்கு ஒப்பனை மூலம் மாற்றியமைக்கலாம். ஒவ்வொருபாத்திரத்தின் குணநலன்களுக்கேற்ப இவை அமைதல் நன்று. கதையமைப்புக்கேற்ப தேவர், அசுரர், அரக்கர், பேய் பிசாசு போன்றும் அமைக்கலாம். பூச்சு மூலம் செயற்படுவது சிரமமாயிருந்தால் முகமூடிகளைச் செய்து பயன்படுத்தலாம்.

நவீன காலத்தில் காலமாற்றத்தையொட்டி நாடகங்கள் இன்னும் பல வடிவங்களில் மாற்றம் பெறலாம். அதற்கேற்ப ஒப்பனைகளுக்கு ஒப்பனையாளர் புதிய உத்திகளைப் பயன்படுத்துவர். ஒப்பனையாளனுக்கு ஓவியம், சிற்பம் போன்ற கலைகள் பற்றி ஓரளவிற்கேனும் தெரிந்திருத்தல் அவசியம் தான் உருவமைக்கப் போகும் ஒரு முகத்தில் தான் நினைக்கின்ற பாத்திரங்களின் சாயலை, ஒப்பனை செய்யுமுன்பே கற்பனைமூலம்பலமுறை கண்டுவிடவேண்டும். அதன் பின் ஒப்பனை செய்யின் காரியம் கைகூடும். இல்லையேற் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதையாகிவிடும். ஆடையணிமணிகளுக்கும் இவை பொருந்தும்.

## மலிவான பொருட்கள்

நடிகர், நடிகையர் அணியும் ஆடை அணிமணிக்கு இயன்றளவு பெருஞ் செலவு செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும். குறைந்த செலவில் இலகுவில் கிடைக்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்தல் வேண்டும். மலிவான பொருளில் நாம் அணியும் உடைகளைப் பார்த்துப் பிரமாண்டமான தயாரிப்பு என இரசிகர்கள் மனதில் ஒரு மயக்கத்தை ஏற்படுத்த வேண்டுமேயொழிய, வேறொன்றுமில்லை.

நம்முன்னோர்கள் மரபுவழி நாடகங்களுக்குத் தலைமயிர், தாடி, மீசை போன்றவற்றிற்கு நமது நாட்டிலே கிடைத்த தும்புகளையும், நார் வகைகளையும் பயன்படுத்தியே தமது தேவையைப் பூர்த்தி செய்து கொண்டனர். சில சமயங்களில் சவரி முடியும் பயன்படுத்தினர். தலைமுடி, தாடி, மீசை நார்களினால் பின்னப்பட்டு அணியும் போது கட்டிக் கொள்ளும் முறையே பின்பற்றப்பட்டது. பூச்சு வகைக்கு முத்துவெள்ளை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு, அப்புருவம் போன்றவை உபயோகிக்கப்பட்டன. ஏறக்குறைய ஐம்பதாண்டுகளுக்குப் பின்னரே மேலைத்தேய ஒப்பனைப் பொருட்களை நம் நாட்டில் உபயோகப்படுத்தத் தொடங்கினர். அதுவும் கொழும்பு போன்ற நகரங்களிலேயே முதலில்பரவத்தொடங்கியது. சமீப காலங்களிலேயே பட்டி தொட்டியெல்லாம் இடம் பிடித்துக் கொண்டது. கிறீஸ்பெயின்ற், கிறேப் கெயர், ஸ்பிறிற்கம், பான்கேக் போன்றவையே அவை. இவை ஆரம்பத்தில் எமது சிரமங்களுக்கு ஆறுதல் தருபவைபோல் வாய்த்தன. விலையும் சகாயம். ஆனால் இன்றைய நிலையில் விலையேற்றமானாலும் நாம் பெற்றுக் கொள்வதற்கு இலகுவாயில்லை. நாம் அவற்றில் விலக்க முடியாததை எடுத்துக் கொண்டு விலக்கக்கூடியதை விலக்கிக் கொள்ளுதல் நலம்.

## நடிகரும் ஒப்பனையாளரே

ஒரு நாடகத்தில் வரும் அத்தனை நடிகர்களுக்கும் ஒரு ஒப்பனையாளர் ஒப்பனை செய்ய முடியாது. நாடகம் மேடையேறுவதற்குச் சில தினங்களுக்கு முன்னரே நடிகர்கள் ஒப்பனையாளரிடம் ஒப்பனை எப்படி அமைய வேண்டுமென்பதை ஒப்பனை செய்வித்து மனதில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும். நாடக தினத்தன்று தனக்குத்தானே ஒப்பனை செய்து கொண்டு அதனை ஒப்பனையாளரிடம் காட்டிப் பூரணப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். நடிகர்கள் ஒவ்வொருவரும் ஒப்பனையாளரே. எவரின் உதவியுமின்றி ஒப்பனை செய்யும் பழைய மரபுவழி நாடக நடிகர்போல் நாமும் மாற வேண்டும். சில வருடங்களுக்கு முன் பிரித்தானிய கலைக்கழகம் யாழ்நகரில் ஒரு நாடகத்தை நடாத்தியது. அந்த நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. சந்தர்ப்ப வசமாக நான் அவர்கள் ஒப்பனை செய்யும் அறையைக் கண்ணுற்றேன். அறையின் நடுவே நீண்ட உயரமான குழாய்களிலான ஒரு ஸ்கிறீன் பொருத்தப்பட்டிருந்தது. அந்த ஸ்கிறீனின் இரு மருங்கும் நடிகர்களுக்கென பகுதி பகுதியாக பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் அவரவர்களுக்குரிய உடைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

(11ஆம் பக்கம் பார்க்க)

தமிழர்களுக்கு எதிரான

# மனித உரிமை மீறல்களின் குறிப்பேடு

| இடம் | தன்மை | சம்பவ விபரம் |
|---|---|---|
| **9-1-1985** | | |
| கொழும்பு | அறிக்கை | அமைச்சர் லலித் அத்துலத்முதலி பதவியாவைச் சுற்றியிருக்கும் சிங்களக் கிராம வாசிகளுக்கு துவக்குகள் கொடுக்கவேண்டும் என்றும் அவற்றிற்குத் தேவையான தோட்டாக்களை பதவியா, அநுராதபுரம் பொலிஸ் நிலையங்கள் மூலம் வழங்கவேண்டும் என்றும் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். |
| யாழ்ப்பாணம் | இறப்பு, காயம் | ஆவரங்கால் கிராமத்தைச் சுற்றிவளைத்த ராணுவத்தினர் ஒரு வயோதிபர், பெண்கள், மாணவர் உட்பட 14 தமிழர்களைக் கொன்றனர். பலர் காயமடைந்தனர். 44பேர் கைதுசெய்யப்பட்டனர். இறந்தவர்களின் சடலங்கள் ராணுவத்தால் எடுத்துச் செல்லப்பட்டு சென். பற்றிக்ஸ் வீதியிலுள்ள சுடலையில் எரிக்கப்பட்டன. அரசாங்கம், தீவிரவாதிகளின் முகாமொன்று தாக்கப்பட்டதென்றும், பெருந்தொகையான ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன என்றும் தெரிவித்தது. |
| யாழ்ப்பாணம் | காயம் | ராணுவத்தினர் கலைமகள் வீதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கந்தையா சந்திரபாலன் (வயது 17), ஜி சேகர் ஆகிய மாணவர்களைக் காயப்படுத்தினர். அவர்கள் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். |
| யாழ்ப்பாணம் | காயம் | அச்சுவேலி ராஜ வீதியில் ராணுவத்தினர் லொறிச் சாரதியான பொன்னுத்துரை சுந்தரலிங்கம் (வயது 3[illegible]) என்பவரைச் சுட்டுக் காயப்படுத்தினர். |
| யாழ்ப்பாணம் | இறப்பு | கரம்பனில், ஞானப்பிரகாசம் யேசுநாயகம், பத்மராஜா ஜெயசீலன், ஆசீர்வாதம் மாணிக்கம், யோசேப் ரவீந்திரன் ஆகியோர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். |
| யாழ்ப்பாணம் | இறப்பு | இனந்தெரியாத துப்பாக்கி மனிதர்களால் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். |
| யாழ்ப்பாணம் | தேடுதல் | அச்சுவேலியில் ராணுவத்தினரால் வீட்டிற்கு வீடு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. |
| யாழ்ப்பாணம் | சேதம் | ஆரிய குளச் சந்தியில் ஒரு குண்டை ராணுவத்தினர் செயலிழக்கச் செய்ய முயற்சிக்கையில் அது வெடித்தது உயிரிழப்புகள் எதுவும் இல்லை. அதையடுத்து சிறிது நேரத்தில் பக்கத்திலுள்ள ஒரு வீட்டின்மீது ராணுவத்தினர் குண்டுகளை எறிந்து அழித்தனர். |
| யாழ்ப்பாணம் | ஆட்சேபனை | யாழ்ப்பாண ஆஸ்பத்திரி ஊழியர்கள் தமது சக ஊழியர்கள் ராணுவத்தால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஒரு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். |
| யாழ்ப்பாணம் | தேடுதல் | ராணுவத்தினர் அரியாலையில் ஒரு தீவிர தேடுதலை மேற்கொண்டனர். |
| முல்லைத்தீவு | திருட்டு | துணுக்காய் உப தபாற் கந்தோரில், தந்தி தொடர்பு உபகரணங்களை இனந்தெரியாதவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். |
| திருகோணமலை | இறப்பு | நிலாவெளி, கோபாலபுரத்தில் யோகராணி அமரசிங்கம் எனப்படும் பெண் (வயது 24) இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். |
| **10-1-1985** | | |
| யாழ்ப்பாணம் | இறப்பு | அமரசிங்கம் சிவநேசன் (வயது 30) இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் அவரது சடலம் காணப்பட்டது. |
| யாழ்ப்பாணம் | சேதம் | தமிழ்த் தீவிரவாதிகளால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. உயிரிழப்புகள் ஏற்படவில்லை. |
| யாழ்ப்பாணம் | திருட்டு | மல்லாகம் கீழ் நீதிமன்றில் 4 தட்டச்சு இயந்திரங்களை இனந்தெரியாதோர் களவாடியுள்ளனர். |
| இராமேஸ்வரம் | ஏனைய | ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதல்களுக்குள்ளாகும் இந்திய மீனவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்கு, இந்தியக் கடற்படைக் கப்பல்கள், தோணிகள், ஹெலிக்கொப்ரர்கள் ஆகியன பாக்கு நீரிணையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கின, |
| தமிழ்நாடு | ஆட்சேபனை | இந்திய மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கொல்லப்படுவதையும், இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்படும் அக்கிரமங்களையும் கண்டிக்கும் முகமாக ஆயிரக்கணக்கான மக்கள் உண்ணாவிரதத்தை அனுஷ்டித்தனர். |
| திருகோணமலை | கைது | மூதூர் அலிம் நகரில் ஒரு இளைஞனைத் தேடிச்சென்ற இராணுவத்தினர், அவனைக் காணாது, அவனது தாயையும் மைத்துனரையும் கைதுசெய்தனர். வெருகலைச் சேர்ந்த விசேட உத்தியோகத்தரான பஞ்சாலிங்கமும், களனியில் வேறு இருவரும் கைது செய்யப்பட்டனர். |
| **11-1-1985** | | |
| மட்டக்களப்பு | கைது | சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களான கோவிந்தசாமி சிவசோதி (வயது 26) கோவிந்தசாமி உலகநாதன் ஆகியோர் பொலிஸ் அதிரடிப் படையினரால் சாய்ந்த மருதுவில் கைதுசெய்யப்பட்டனர். |

(தொடரும்)

# இலங்கையில் பேச்சுவார்த்தைகளின் நடைமுறை: 1983-86

(30-3-1990 இன் தொடர்ச்சி)

33. ஜனாதிபதி செயலகம்: திரு பார்த்தசாரதிக்கும்—ஜனாதிபதி ஜெயவர்த்தனவிற்கும் இடையிலான சந்திப்புக்கள் (கொடுக்கப்பட்ட தலைப்பு) கொழும்பு: இலங்கை அரசு 83 11.10 1 - ப.

இம் மட்டத்தில் த. ஐ. வி. முன்னணியினருக்கு அரசாங்கத்தினால் அளிக்கப்படவுள்ள திட்டங்கள் அடங்கியுள்ள அம்சங்களாவன:

1. தனிநாடு கோரிக்கையைக் கைவிடுதல்.
2. மாகாணத்துள் அமைந்துள்ளதாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான அனுமதி. மாவட்டங்களின் சபை அங்கத்தவர்களாலும் சர்வஜன வாக்கெடுப்பினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் இணைப்பு.
3. திருகோணமலையினது நிர்வாகம் மத்திய அரசாங்க செயற்பாட்டின் கீழ்

34. தமிழர் மிதவாதிகளா அல்லது சிங்களவர். கடினமானவர்களா இப்பொதியினை வாங்குவார்களா? லங்கா கார்டியன். 83 11.15 V.6 (14) 3 - ப.

டில்லி — சென்னை — கொழும்பு ஆகிய நகரங்களில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள்,பலகட்டங்களை உட்கொண்ட தொடர்புகள் மூலம் புதிய திட்டப் பொதியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. த. ஐ.வி. முன்னணி இதனை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அல்லது அரசாங்கம் இதற்கு சிங்கள மக்களின் ஆதரவைப் பெற முடியாவிட்டால் மேலும் கலவரங்களும், குழப்ப நிலைமைகளும் தொடரும் என இங்கு கூறப்பட்டுள்ளது.

35. பாலசூரிய திஸ்ஸ: இனப் பூசல்களும் கிறிஸ்தவ மத கோவில்களின் பங்கும். கொழும்பில் மதகுருமார் கூட்டத்தில் இடம் பெற்ற பேச்சு
சமய சமூக நடுநிலையம்,
83 - 11 - 15
ப.ச.ச.3 சிறுபத்திரிகை எண் 14. லங்கா கார்டியனிலும் பிரசுரிக்கப் பட்டது. பார்க்க, V 6(16) ப. 6 - 24, V 6. (17) ப. 14 - 15, V 6, (18) ப. 19 - 21, பா, 6 (19) ப. 16 - 17.

1983 இல் இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பாக கட்டுரையாளர் முன்வைக்கும் சில கோட்பாடுகளுடன் ஆரம்பிக்கின்ற இது, இனக்கலவரமா, இடதுசாரிகளின் சதியா, வலதுசாரிகளின் சமூக ஒழுங்கைக் குலைப்பதற்கான திட்டமா என்பது இவரின் கருதுகோள்.

நிகழ்வுகளின் விளைவுகளைச் சுட்டிக்காட்டி, கஷ்டமான காலங்களுக்கூடாகச் சென்றுள்ளவர்கட்கு சிங்கள மக்களது பங்கினையும், கிறிஸ்தவர்களது அணுகுமுறைகளையும் சுட்டிக்காட்டுகின்றார். இவர் நடுநிலைக்குழு சுமுகமான செயற்பாட்டிற்கும் பல்வேறு வழிமுறைகளைக் காட்டுகின்றார்.

36. சிறு துண்டுகளை மெதுவாக எடுத்தல். ஏசியா வீக், 83 11 25 பா. 9 (47) ப 22.

இந்தியத் தூதுவர் பார்த்த சாரதிக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் பின் முன்வைக்கப்பட்ட பிரதேச சுயாட்சிக்கான ஆரம்ப முயற்சிகளுக்கு இக்கட்டுரை புதிய நம்பிக்கையினை முன்வைக்கின்றது. இக் கட்டுரை ஜோடை 1983 இல் இடம்பெற்ற விளைவுகளையும் தொட்டுக் காட்டுவதோடு இலங்கைக்கு சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுள்ள களங்கம், மற்றும் பொருளாதாரத்தைப் புனரமைத்தல் போன்ற பிரச்சினைகளையும் காட்டுகின்றது.

37. தாராள ஜனநாயக அமைப்பிற்கான குழு. இலங்கையில் இன உறவுகள் தொடர்பாக ஜனாதிபதி ஜயவர்த்தனவிற்கு எழுதப்பட்ட கடிதம் (கொடுக்கப்பட்ட தலைப்பு) கொழும்பு தாராள ஜனநாயக அமைப்பு 83. 11. 30 4 - ப

இக்கடிதம் தற்போதைய இன உறவுகள் பற்றிய நிலையினை விளக்குவதோடு, ஓர் பேச்சுவார்த்தை அடிப்படையிலான தீர்விற்கான தேவையினையும் சுட்டிக்காட்டுகின்றது. இலங்கை நாடாளுமன்ற ஜனநாயகம் குறைவடைந்து செல்லும் தருணத்தில் இனப் பூசல்கள் இடம் பெற்றுள்ளன. பல சிபார்சுகள் இங்கு இடம்பெற்றுள்ளன.

38. நாராயணன் எஸ் வெங்கட். இறுதியில் ஓர் வழி திறப்பு. இந்தியா ருடே 83 11 30 ப- 8 (22, ப - 69

இந்தியத் தூதுவர் பார்த்த சாரதிக்கும் ஜயவர்த்தனவிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு பற்றி இக்கட்டுரை குறிப்பிடுகின்றது. இங்கு தயாரிக்கப்பட்ட ஓர் திட்டத்தில் த. ஐ. வி. முன்னணியினால் கோரப்படும் தமிழீழக் கோரிக்கையினைக் கைவிடுவது மாவட்ட சபை அங்கத்தவர்கள் ஏற்றுக்கொண்டதற்கமையவும் மாவட்டங்களின அபிப்பிராய வாக்கெடுப்பின் பின்னர் - ஓர் மாகாணத்துள் மாவட்ட அபிவிருத்திச்சபைகளை ஒன்றிணைப்பது, திருகோணமலை நிர்வாகத்தினை மத்திய அரசின் செயற்பாட்டில் கொண்டு வருவது போன்றவை அடங்கின. பார்த்தசாரதி த. ஐ வி. மு. தலைவர்களைச் சந்திப்பதற்காக டில்லிக்கு அழைத்துள்ளார்.

39. பேச்சுவார்த்தை மூலம் தீர்வா? தமிழ் ரைம்ஸ் 83.12.00 பா. 3 (2) 2 ப. 2-11

சர்வ கட்சி மாநாட்டினை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசின் திட்டங்கள் தொடர்பாகத் தமிழரது உரிமைகளை இதன் ஆசிரியர் தலையங்கம் தெரிவித்துள்ளது. இன்றைய நிலைமையில் தமிழர் தமது சுய நிர்ணய உரிமைக்கான தமது உரிமையினை விட்டுக் கொடுக்கலாகாது என இங்கு கூறப்பட்டுள்ளது.

40 ஜயவர்த்தன ஜே. ஆர். அரச பிரேரணைகளுக்கு த ஐ வி, மு. யினரின் பதில். கொழும்பு: இலங்கை அரசு 83,12.01 1 ப.

பத்திரிகைச் செய்திகள் பேச்சுவார்த்தைகளுக்கான நம்பிக்கையினை வெளிக்காட்டியுள்ளன. த.ஐ வி.மு. தனி நாட்டிற்கான கோரிக்கையினை விட்டுவிட்டது போலத் தெரிகின்றது. மேலும் இந்திய அரசு, இலங்கையின் சுதந்திரம், ஒற்றுமை, இறைமை என்பவற்றிற்கு உத்தரவாதம் அளித்துள்ளது.

41. ரெட்டி ஜி. கே ஒத்துப் போகக்கூடிய அணுகுமுறை த ஐ வி. முன்னணியினருடனான பேச்சுக்கள் மூலம் வரக்கூடும். லங்கா கார்டியன் 83.12 01 பா. 6 (15) 2 ப. 4. 23

19 நவம்பர் 1983. இந்து பத்திரிகையிலிருந்து மறு பிரசுரம். இக் கட்டுரை பிரதம மந்திரி காந்தி சார்பாக திரு. பார்த்தசாரதிக்கும் த.ஐ வி. மு, தலைவர்கட்கும் இடையில் சர்வகட்சி மாநாட்டு அடிப்படை நோக்கு தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. இக் கலந்துரையாடல் அதிகாரப் பரவலாக்கம், பிரதேச சபைகள் பற்றி அதிக கவனம் செலுத்தியுள்ளது.

42. வீரக்கோன், காமினி, பார்த்தசாரதி முட்டுக்கட்டையினை உடைப்பதற்கு முயற்சி லங்கா கார்டியன் 83.12 01 V 6 (15) ப,6 1983 நவம்பர் 21, ஐலன்ட் பத்திரிகையிலிருந்து மறுபிரசுரம்.

1983 முடிவில இந்தியாவின் இராஜதந்திர முயற்சிகள பற்றிய சுருக்கமான தொகுப்பினை இக்கட்டுரை கொடுக்கின்றது. இந்திய பிரதம மந்திரியின் சிறப்புத் தூதுவர் பார்த்தசாரதிக்கும த.ஐ. வி. முன்னணித் தலைவர்கட்கும் இடையிலான பேச்சுக்களில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை.

43. டி. சில்வா. மேர்வின்: ஜே ஆர். இந்திரா, ஓர் புதிய இராஜதந்திரீக "மவுரி" லங்கா கார்டியன். 83.12 01. பா 6 (15) ப. 2. 3 - 5

இனப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்கள், ஜனாதிபதி ஜயவர்த்தனவுடன் டில்லியில், ஓர் எதிர்பாராத சூழ்நிலையில் இடம்பெறுகின்றன. கட்டுரை ஆசிரியரின் படி, 1983 இறுதியில் வரையப்பட்ட இரண்டு பெரிய முடிவுகளாவன: இந்தியாவின் நிச்சயமான இராஜ தந்திரீய பங்கு, மற்றும் த. ஐ. வி முன்னணியின் தமிழ் மக்களிடையே ஆதரவினைப் பெறுவதில் கொண்டுள்ள விரக்தி நிலை அதிகரித்துச் செல்லுதல் என்பனவாகும். இவரின் படி பிரதான பிரச்சினை, ஓர் தன்னாட்சி பிரதேசத்தின் புவியியல் எல்லைகளை நிர்ணயிப்பதும், அவ்வமைப்பில் அதிகாரங்களை அளிப்பதுமாகும்.

44. நம்பிக்கைக்கான அறிகுறிகள் ரிபியூன் 83 12 10 பா 28 (8) ப 3 2 - 4

இதன் ஆசிரியர் தலையங்கம் ஜனாதிபதி ஜயவர்த்தனவின் டில்லி விஜயத்தினைத் தொடர்ந்தும், த.ஐ.வி. முன்னணியினர் தமது கட்சி தனிநாட்டுக் கோரிக்கையினை விட்டு விடத் தயாராக இருப்பதாக விடுக்கப்பட்ட அறிக்கையினைத் தொடர்ந்தும், ஓர் வெற்றிகரமான பேச்சுவார்த்தைக்கான சாதக நிலைமை பற்றி ஆராய்கின்றது.

45. அகில இலங்கை முஸ்லிம் லீக் - அம்பாறை மாவட்ட சம்மேளனம்-மாகாண கூட்டம் - அக்கரைப் பற்று, கொழும்பு: அகில இலங்கை முஸ்லிம் லீக் - அம்பாறை மாவட்ட சம்மேளனம் - 83 12 12 3 ப -

அம்பாறை மாவட்ட அகில இலங்கை முஸ்லீம் லீக்விடுத்த அறிக்கை த. ஐ வி. முன்னணியின் வடக்கு கிழக்கு மாகாணங்களை தனித்தனி மாவட்டங்களாகப் பிரிக்கும் திட்டத்தினை ஆதரிக்க முடியாதெனக் கூறுகின்றது. அம்பாறை மாவட்டம அருகிலுள்ள ஊவா மாகாணத்துடன் இணைக்கப்பட்டால் அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதிநிதிகள மறுதலையாகப் பாதிக்கப்படுவர் எனறும், திட்டமிடப்பட்டுள்ள மாவட்டங்கள் இப்பிரதேச இனத்தின் சமநிலைத் தன்மையினைப் பாதிக்கும என வும் விவாதித்துள்ளனர்.

46. நாராயணன். எஸ். வெங்கட்: ஏ. அமிர்தலிங்கம்: "வாழ்க்கையென்பது சாத்திய மற்றதாகியுள்ளது" இந்தியா ருடே, 83 12 15. பா. 8 (23) ப. 49

ஓர் பேட்டியில், த. ஐ. வி. மு. செயலாளர் நாயகம் இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தையில் தமது கட்சியின் நிலைபற்றி விளக்குகின்றார். இவர் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர் பாதுகாப்பு கருதி இணைப்பது பற்றி வற்புறுத்துகின்றார். ஜனாதிபதி ஜயவர்த்தன இக் கொள்கையினைப் பெரும்பான்மைச் சிங்களவருக்கு "விற்கக்" கூடிய தகுதி வாய்ந்தவர் என்கிறார்.

47. நாராயன் எஸ். வெங்கட் பாதுகாப்போடான நம்பிக்கையுணர்வு இந்தியா ருடே 83 12 15 பா 8(23) 2 ப - 48 - 49.

ஜனாதிபதி ஜயவர்த்தன பிரதமர் காந்தி இடையிலான பேச்சுக்களின் பின்னர் இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வினை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பு பற்றி இக் கட்டுரை ஆராய்கின்றது. இலங்கை அரசும், த ஐ வி. முன்னணியும் மிக நெருங்கி வந்துவிட்டதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்ருக இணைப்பதே தற்போது பெரும் பிரச்சினையாக உள்ளது.

48. டி. சில்வா மேர்வின் ஜே. ஆர். J R. on the high wire. லங்கா கார்டியன் 83 12 15 பா 6 (16) ப, 3

கட்டுரையாளர், ஜனாதிபதி ஜயவர்த்தன ஒரு பிரச்சினை முகாமையாளர் போல, ஓர் இராஜ தந்திரியாகவும், ஓர் அரசியல் வாதியாகவும் காணப்படும் ஒருவித பங்களிப்பினைச் செய்பவராகக் காண்கின்றார். பிரச்சினை முகாமைத்துவத்தின் முதல் வேலை டிலலி கொள்கைப் பொதிகளை விற்பதன் மூலம் இலங்கையில் தேர்தல் மாவட்டங்களைக் கைப்பற்றிக் கொள்வதாகும். (தொடரும்)

## மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம்

அனைத்து நாடுகளுக்கும் பொதுவான மனித உரிமைகள் பற்றிய ஒரு சாசனத்தை ஆயத்தம் செய்ய வேண்டுமென்பது, ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கமாக அதன் ஆரம்ப காலத்திலிருந்தே அமைந்தது. அச்சபை சான் பிரான்சிஸ்கோ எனனும் அமெரிக்க நகரில் 1945 ஆம் ஆண்டில் கூடிய பொழுது, மனித உரிமைகள் பற்றிய ஆய்வுக்குழு ஒன்றை நியமிப்பதென தீர்மானித்தது. இச்சபையின் பொதுச் செயற்குழு (General Assembly) 1946 ஜனவரியில் அதன்முதல் அமர்வில், மனித உரிமைகள் பற்றிய ஆய்வுக்குழு அனைத்துலக நாடுகளுக்கும பொதுவான மனித உரிமைகள் பற்றிய சாசனம் ஒன்றை உருவாக்க வேண்டுமெனக் கோரியது. இதற்கான வேலையை மனித உரிமைகள் பற்றிய ஆய்வுக்குழு 1947 பெப்ரவரியில ஆரம்பித்து ஏறத்தாழ இரு ஆண்டுகளுக்குப் பின், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயற்குழுவுக்குத் தனது விவாதத் தொகுப்பைச் சமர்ப்பித்தது. 1948 ஆம ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ஆம் நாள் இடம் பெற்ற அமர்வில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயற் குழு மனித உரிமைகள் பற்றிய உலகப்பிரகடனத்தை அங்கீகரித்தது. இதில் 48 பேர் சாதகமாக வாக்களித்தனர். 8 பேர் வாக்களிக்காது நடு நிலைமை வகித்தனர். எவராவது பாதகமாக வாக்களிக்கவில்லை.

— லோ. வ. இராயப்பு (மா. ம. தி )

## ஒவ்வொரு காலையிலும்...

எப்போது பார்த்தாலும்
ஒவ்வொரு காலைப் பொழுதும்
அழுது கொண்டேதான் விடிகிறது.
அழுகை.....
உள்ளத்தில் உறைந்திருக்கும்
கவலையைக் கரைத்தபடி நீராய்ஓடும்.
ஒவ்வொரு இரவிலும் கவியும்
சோகை பிடித்துப்போன கருமையைக்
கரைத்தபடி பிழியப்பிழிய அழுது சோர்ந்து
முகம் வெளுறிய குழந்தையாய்த் தோன்றும்
காலை.
ஒவ்வொரு காலையும்
என் தேசத்தின் எங்கோ ஒரு மூலையின்
ஒரு மனித ஆத்மாவின் ஒப்பாரியுடன்தான்
ஆரம்பிக்கிறது.
இயமதூதர்கள் வந்து போனதற்கு
அடையாளமாய்
சேற்றில் அழுந்தப் படிந்திருக்கும்
சப்பாத்துக் கால் தடங்களையும்
எரிந்து முடிந்து எஞ்சியிருக்கும் வயலையும்கூட
காலையில்தான் பார்க்கமுடிகிறது.
தென்னோலைத் தோரணங்கள்
வீதியெங்கும் நிறைந்து
தலையை நெருடுகிறது.
மழைவருவதன் அறிகுறியான
இடியோசையைப் போல
எங்கும் சதாநேரமும்
துக்கத்தைப் பிரகடனப்படுத்தும்
பறை முழக்கம்.
அதில் அமுங்கியபடி
எந்நேரமும் இடைவிடாது கேட்டுக்கொண்டிருக்கும்
நாய்களின் ஊளைச் சப்தம்
சங்கக்கடைகளில் கூப்பனிற்காகக் காத்திருக்கும்
நீண்ட வரிசைகள்!
இன்றையின் தொடர்ச்சியாய் நாளையும்
இதேமாதிரி.... இதே ரீதியில்...
வேண்டவே வேண்டாம்
நாளைய காலை விடியவே வேண்டாம்

— மைதிலி அருளையா ☐

## ONE WAY

பளிச்சிடும் வேகமான பார்வையின் முன்னால்
என் ஆவி
காற்றைப் போல் சுழன்றடித்ததையும்
அதில் நான் பலஹீனமானதையும்
நீ அறிவாய் ..

என்னை உன்கண்களுள் இருத்தி
என்னை வானத்துக்குத் தூக்கியபோதெல்லாம்
நான்
உயிர் பெருமல் துடித்ததையும்......
குகைவாயிலிருந்து ஊதி ஊதி
தீயை வளர்த்துக் கொண்டதையும் ...
எங்கெல்லாம தேடி
உன் முகத்தைப் பொறுக்கமுடியாமல்
போனதையும்......
நீ அறிவாய் ,,

வாழ்வின் கோலங்கள் தெரியத்தெரிய
அதனால் நொந்து போனதை
நான் அறிவேன்....

— நற்பிட்டிமுனை பளீல் ☐

## நிகழாத ஆரம்பம்!

எவ்வளவுகாலம் ஓடுவாய்
அந்நியமாய் .....
அர்த்தமற்ற பாதச்சுவடுகள்......
அதனருகே, முறிந்துபோன புல்நுனிகள்.
இன்னும் நீ
வாழத்துவங்கவில்லை!

— புதிய ஜீவன் ☐

## தூவானம்

- எனது இராகங்கள்
- பேய் காக்கும் வீடு

புதுக்கவிதை இன்று பலரின் கவனத்தை ஈர்த்த ஒரு வடிவமாகிவிட்டது. அதன் இலகுதன்மை அவ்வாகர்ஷிப்பின் பிரதான காரணியாகலாம். இத்தன்மையே, கவிதை வெளிப்பாட்டிலும் ஈடுபடப் பெரும்பாலானோரைத் தூண்டும் காரணியாகவும் அமைகிறது. ஒருவனின் வாசிப்பு அவனது இரசனையைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றும். பரவலாகப் படிக்கக் கிடைக்கும் புதுக்கவிதை நூல்களின் செல்வாக்கை இளங்கவிஞர்கள் பலரிடம் காணமுடிகிறது. பெரும்பாலும் வசனப் பாங்கான, வர்ணனை வரிகளே "கவிதைகள்" என அச்சேறுகின்றன.

வவுனியா திலீபன் எழுதிய எனது இராகங்கள் கவிதைத் தொகுப்பை அண்மையில் படித்தேன். காதல் உணர்வுகள், தேசத்தின் மீதான பாசம், பெண்களின் ஒடுக்கப்பட்ட நிலைமைகள் மீதான அக்கறை—கோபம் என்பன, அவரது கவிதைகளின் பொருள்களாகியுள்ளன. இக் கவிதைகளிற் பலவும் வசனப்பாங்கான வர்ணனை வரிகளாகத்தான் இருக்கின்றன. முன்னுரை எழுதிய செம்பியன் செல்வன் குறிப்பிட்டுள்ளது போல் "... தென்னகக் கவிஞர்களான நா. காமராசன், மு. மேத்தா, வைரமுத்து போன்றோரின் பாதிப்பிலிருந்து விடுபட முடியாதவாறு தவிப்பதும்" தெரிகிறது.

ஆயினும் கவித்துவ ஆற்றல் ஆங்காங்கே பளிச்சிடுவதைக் காணமுடிகிறது.

"பாரதி!
நீ
தேடிய தேசத்தை
நாம்
கனவுகளில் தாம்
கண்டு கொண்டிருக்கிறோம்.
வெள்ளை
வெறியர்களைத்
துரத்த
வெடித்தெழுந்தவனே –
இங்கே பார் ...
நாம்
கறுப்புக் கைகளினால்
கட்டப்பட்டுக் கிடப்பதை!"

என்ற வரிகளையும்,

"மலர்களை
மதிப்பதாக
எண்ணிக் கொண்டு
என் கால்கள்
எத்தனை முட்களை
முத்தமிட்டிருக்கின்றன...!

படிகள் என
நினைத்தபடி
நான்
எத்தனை பள்ளங்களில்
இடறி விழுந்திருக்கிறேன்!"

என்பவற்றையும் இதற்கு உதாரணமாகக் காட்டலாம். 'கையில் கிடப்பது பூ' என்ற கவிதையும், 'கறுப்பு இனத்தின் வெளிச்ச விளக்கு' என்ற கவிதையும் உணர்விறுக்கத்துடன் தம்மைத் தொற்ற வைத்துக்கொள்வதில் வெற்றி காண்கின்றன.

பெரிய கவிதைகளை விடவும் இத் தொகுப்பிலுள்ள சிறிய கவிதைகளில், இறுக்கமும் நேர்த்தியும் காணப்படுகின்றன.

### சுதந்திரம்

தாராளமாக
வாய்களைப் பயன்படுத்தலாம்:
சாப்பிடுவதற்கு மட்டும்!

### சோகம்

நான் காணாமல் போய்விட்
டேன்
கண்டு பிடியுங்கள் :
கண்ணீருக்குள்!

### போராளி

இமைகள்
திறந்திருக்கும்
வயிறு
பசித்திருக்கும்
கால்கள்
பழுத்திருக்கும்
ஆனாலும்,
தேசம்
அவன் சிந்தனையில்
மொய்த்திருக்கும்!

இறுதியாக, நம்நாட்டு தா. இராமலிங்கம், சண்முகம் சிவலிங்கம், சு. வில்வரத்தினம் சேரன் போன்றோரதும்; தமிழகத்து கு. ப. ரா., புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி, தருமு சிவராமு, ஞானக்கூத்தன், நா. சுகுமாரன் போன்றோரினதும் புதுக்கவிதைக் கலை முறைகளுடன் பரிச்சயங் கொள்வது, திலீபன் போன்ற இளங்கவிஞர்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும் என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். ☐

சென்ற மாத முற்பகுதியில் 'சர்வதேச மகளிர் தினத்'தையொட்டி. சில வீடியோத் திரைப்படங்கள் 'யாழ். பல்கலைக்கழகத் திரைப்படச் சங்கத்'தால் காட்டப்பட்டன. பேய் காக்கும் வீடு என்ற, சுமார் 30 நிமிட நேரங் கொண்ட குறும்படமும் அவற்றில் ஒன்றாகும். கொழும்பிலுள்ள 'மகளிர் ஆராய்ச்சி நிலையம்' தயாரித்த இப் படத்தை ஷாமினி பொயில் என்ற பெண் இயக்கியுள்ளார். சிங்களத்தில் தயாரிக்கப்பட்ட படத்திற்கு, இடையிடையே தமிழில் குரல் கொடுத்து ஆக்கப்பட்ட பிரதியே, இங்கு காட்டப்பட்டது.

இலங்கையில் நிலவும் ஆணாதிக்கச் சமூகச் சூழலில், படித்து ஆசிரியையாக வேலை பார்க்கு பெண்கூட எவ்வாறு கணவனால் அடித்துத் துன்புறுத்தப்படுகிறாள் — வேலை செய்யுமிடம், தங்குமிடம், பொது இடங்கள் என்பவற்றிலெல்லாம் எவ்வாறு அவள் உதவியற்றவளாகிறாள் — 'மனைவி' என்ற உரிமையை வெளிப்படுத்தியபடியே மட்டும் இவ்விடங்களில் அவளைக் கையறு நிலைக்குத் தள்ள, கணவனால் எப்படி முடிகிறது — இறுதியில் "பேய் பிடித்தவள்" எனப் பட்டம் சூட்டி அவளது உள்ளத்தையும் உடலையும் எப்படித் துன்புறுத்த முடிகிறது என்பதே இப்படத்தின் கதையாகும்.

இயல்பான சம்பவவைப்புக்கள், பாத்திரச் சித்திரிப்புக்கள் மூலம் இந்நிலைமைகள் நன்கு வெளிப்படுத்தப்படுகின்றன. பேயோட்டும் சடங்கின் போதான 'தொவில்' நடனக்காரனை 'குளோசப்'பில் காட்டும் காட்சியுடன் ஆரம்பிக்கும் படம், முன் கதையைச் சித்திரித்து, மறுபடியும் பேயோட்டுவோனின் நடனத்துடனும், அவனது அடிகளைத் தாங்க முடியாது மயங்கி விழும் பெண்ணைக் காட்டுவதுடனும் முடிவுறுகிறது. இறுதிக் காட்சி, ஒரு மானிட ஜீவிக்கெதிரான அவமரியாதை என்ற உணர்வை எம்முள் கிளறிவிடுகிறது. அப்பெண்ணின் மீது நாம் கொள்ளும் பரிவு படத்தின் கலை வெற்றியாலேதான் சாத்தியமாகிறது.

## நீலாம்பரன்

உயிர்த்துடிப்பு நிறைந்த இக் குறும்படத்தை. விவரணப் பாங்கிலமைந்த — தட்டையான — தமிழ்க்குரல் சிதைக்கப்பார்க்கிறது. காட்சிரூப வெளிப்படுத்தல்களே பெரிதும் கையாளப்பட்டிருப்பதால், தமிழ்க்குரல் இல்லாதிருந்தாலும், பார்வையாளர் படத்தைப் புரிந்துகொள்வதில் அதிகசிரமம் ஏற்பட்டிருக்காது. வேண்டுமானால் தமிழில் அச்சிடப்பட்ட குறிப்புகளை, படம் ஆரம்பிக்குமுன் பார்வையாளருக்கு வழங்கலாம்.

'மகளிர் ஆராய்ச்சி நிலையம்' தனது வருங்காலத் தயாரிப்புகளின்போது, இதனைக் கருத்திற் கொள்வது நல்லதெனக் கருதுகிறேன். ☐

## மழை

இடி மின்னலோடு மழை
இறங்கி வந்திற்று.


காற்றின் புழுதி கழுவியது;
கனன்று எரிந்த தீயை அணைத்தது;
வேர்களுக்கு நீர் விட்டது.

இனி,
வசந்தங்கள் துளிர்க்கும்;
வருங்காலம் செழிக்கும்.

— எஸ். எச். எம். ரபீக்

# வேலைநிறுத்தம்

க. நா. சுப்ரமண்யம்



ஆங்கில நாடகமொன்றைத் தழுவி க. நா. சு. வினுல் எழுதப்பட்ட இந்நாடகம் 1944 இல் வெளிவந்த ஏழு நாடகங்கள் தொகுப்பில் உள்ளது. நன்றியுடன், எமது வாசகருக்காக அதனை இங்கு தருகிறோம்.

பாத்திரங்கள்
ஓர் இலக்கிய ஆசிரியன்
சாயைகள்: இளம் பெண்
கிழவன்
நவயுவன்

நள்ளிரவு
ஓர் இலக்கிய ஆசிரியனின் அறையில், ஆசிரியன், கையில் ஒரு பேனு, எதிரே எழுதாத காகிதங்கள் ஒரு கற்றை இவற்றுடன் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறான். மேஜைமேல் பிரகாசமான விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது.

ஆசிரியன்: இந்த வங்காளக் கதாசிரியர்கள் மொத்தத்தில் நன்ருகத்தான் எழுதியிருக்கிருர்கள். அவர்களுடைய கதைகள் சமூக சித்திரங்கள்; அவற்றில் தற்கால மனிதனின் ஹிருதயம் துடிக்கிறது. வாசகன் உள்ளத்தை உருக்கி, கண்ணிலிருந்து நீர் வடியும்படி அவர்கள் நமது வாழ்க்கையை எவ்வளவு அழகாகச் சித்திரித்துவிடுகிருர்கள்! ஏன் எனக்கும் இது சாத்தியமாகவில்லை? கற்பனுசக்தி ... (அவன் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருக்கிருன்.) ஆம், இன்றே எழுதிவிடுகிறேன். அது அவ்வளவு பிரமாதமான காரியமா?

(எழுத ஆரம்பிக்கிருன். ஒவ்வொரு வார்த்தையையும் உரக்கச் சொல்லிக்கொண்டே எழுதுகிருன்.)

பாத்திரங்கள்: ஓர் இளம் பெண் (வெளிச்சத்துக்கு அப்பால் ஒளியின் சாயையில் ஓர் இளம் பெண்ணின் உருவம் தோன்றுகிறது) ஒரு கிழவன்; (ஒரு கிழவனின்) உருவம் இளம் பெண்ணுக்கு அருகில் எழுகிறது.) ஒரு நவயுவன்; (அவன் உருவமும் எழுகிறது.)

(ஆசிரியன் இதை எழுதிவிட்டு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு மறுபடியும் யோசனையில் ஆழ்கிருன். அப்போது ஒளிச் சாயையில் தோன்றிய மூன்று உருவங்களும் கொஞ்சம் முன் நகர்ந்து வந்து தங்களுக்குள் பேசிக் கொள்ளுகின்றன.)

பெண்: ஹ! நாம் மறுபடியும் சந்திக்கிறேம்!

கிழவன்: இது எத்தனுவது தடவை?

யுவன்: கணக்கெடுப்பதை இந்த நூற்ருண்டின் ஆரம்பத்திலேயே நான் விட்டுவிட்டேன்.

கிழவன்: நமக்கு ஓய்வு ஒழிவே கிடையாதா? இப்படி மீண்டும் மீண்டும் சந்தித்துப் பிரிவதுதான் நமது தொழிலாகப் போய் விட்டது.

பெண்: (யுவன் பக்கம் திரும்பி) நான் உன்னை என் முழு மனசுடனும் நேசிக்கிறேன். ஆனுல், சந்தர்ப்பக் கொடுமை, சமூகக் கொடுமையால் நான் இந்தக் கிழத்தை மணக்க நேரிடுகிறது.

கிழவன்: உன்னை எனக்குக் கலியாணம் பண்ணிக் கொடுப்பார்கள். சமூக கண்ணும், சிந்திய மூக்குமாக உன்னைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். ஆனுல் எனக்குப் பணமிருக்கிறது; ஒரு பெண்டாட்டி தேவை. நான் செய்யக் கூடியது என்ன?

யுவன்: சீக்கிரம் இறந்த விடுவதைத் தவிர நீ செய்யக் கூடியது என்ன?

யுவன்: சீக்கிரம் இறந்துவிடுவதைத்தவிர நீ செய்யக்கூடியது என்ன?

கிழவன்: அவள் என்னைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. அவள் மனம் உடைந்து விட்டது.

பெண்: கலியாணமாய்க் கொஞ்ச நாள் நான் கிழவனுடன் வசித்துவிட்டுப் பிறந்த வீட்டுக்கு வருகிறேன். அங்கு என் காதலனை மறுபடி சந்திக்கிறேன். என் காதலனுல் இக் கிழத்துக்கு ஒரு குழந்தை பிறக்கிறது.

கிழவன்: எனக்கு அது பற்றிச் சந்தேகம் தான். ஆனுல் நான் அதைப் பொருட்படுத்துவதாக இல்லை. எப்படியும் நான் இறக்கவேண்டியவன்தானே!

யுவன்: கடைசியில் அவள் விடுதலை பெற்றுவிட்டாள் என்று அறிந்து என் மனம் மட்டற்ற ஆனந்தம் கொள்ளும். அவள் விதவையாகத் திரும்பியதும் நான் அவளை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வேன்.

பெண்: ஆனுல்

கிழவன்: உஷ்! உரக்கப் பேசாதே! இதோ யாரோ ஒருவன் உட்கார்ந்து நாம் பேசுவதையெல்லாம் கவனித்துக்கொண்டிருக்கிருன்.

பெண்: நாம் பேசுவது அவன் காதில் விழுமோ?

யுவன்: கையில் பேனுவைப் பார்த்தால் தெரியவில்லையா? நம்மை அம்பலத்தில் இழுத்து எப்பொழுதும் ஒரே மாதிரியாக ஆடச் செய்யும் ஆசிரியர் இனத்தைச் சேர்ந்தவன் தான் இவனும்.

கிழவன்: ஆம் இன்று இவனுடைய அழைப்பின் பேரில்தான் நாம் இங்கு மறுபடியும் கூடியிருக்கிறேம் போலிருக்கிறது. இன்று நமது லோகத்தை விட்டுக்கிளம்பவே மனமில்லை.

பெண்: எனக்கும் மனமில்லை தான். ஆனுல் என்ன செய்வது? இந்த ஆசிரியர்கள் அழைக்கும் போதெல்லாம் வந்து நிற்கவேண்டும் என்று தானே கடவுள் நம்மைச் சிருஷ்டித்திருக்கிருர்!

கிழவன்: அதுசரிதான். ஆனுல் நேற்றுப் பிறந்த பையன் இவன் – பழைய நாடகத்தையே திரும்பவும் நடத்துவிப்பதற்கு என்னை இவ்வளவு தூரம் இழுத்திருக்க வேண்டியதில்லை. இதே நாடகத்தைத் திரும்பத் திரும்ப நடித்து எனக்கு அலுத்துப் போய்விட்டது.

பெண்: எனக்கும் அப்படித் தான்.

யுவன்: எனக்குந்தான். ஆனுல் வெறும் நிழல்களாகிய நாம் சொல்லுவதை யார் கவனிக்கப் போகிருர்கள்?

பெண்: அதோ, அவன் எழுத ஆரம்பித்து விட்டான் என்ன எழுதுகிருன் பார்க்கலாம்!

(மூன்று சாயைகளும்வெளிச்சத்திலிருந்து நிழலுக்குள் பதுங்குகின்றன. ஆசிரியன் நிமிர்ந்து உட்கார்ந்து வார்த்தைகளை உரக்கச் சொல்லிக் கொண்டே எழுதுகிருன்.)

ஆசிரியன்: மனோரம்மியமான மாலை வேளையில், அருவிக் கரையிலே, இளந் தென்றல் வீசும் நேரத்திலே, லதாக்ருஹத்திலே, காதலர் இருவரும் கூடுகின்றனர். அதுவே அவர்களுடைய கடைசிச் சந்திப்பு மறுநாள் அவளுக்குக் கலியாணம், மணமகன் ஒரு கிழவன்; பணக்கார ஜமீன்தார். காதலர் இருவருடைய மனமும் உடைந்துவிடத் தக்க ஒரு வேதனை அவர்களைப் பாதிக்கிறது ஆனுல் கலியாணத்தை நிறுத்தி விட வழியில்லை. பழைய நினைவுகள் மோதுகின்றன. கண்ணீர் வெள்ளம் பெருகுகிறது. இருட்டிய பின், கசங்கிய இளமை. (வாக்கியத்தைப் பாதியில் நிறுத்திப் பேனுவை மேஜைமேல் போட்டுவிட்டு, மறுபடி யோசனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருக்கிருன் ஆசிரியன்.

மூன்று சாயைகளும் மெதுவாக அடிமேல் அடிவைத்து ஒளிப் பிரதேசத்திற்கு நகர்ந்து வந்து பேச ஆரம்பிக்கின்றன.)

பெண்: பழங் கதையேதான்!

கிழவன்; அப்படித்தான் தோன்றுகிறது.

யுவன்: நமது துரதிர்ஷ்டம் அது! (பெருமூச்சுடன்) என்ன பண்ணுவது!

கிழவன்: கவிதா விலாசம் படைத்த ஒரு ஷேக்ஸ்பியரிடம் சிக்கினுமில்லையே!

யுவன்: நாவன்மைபடைத்த ஷாவிடம்...

பெண்: சிந்தனைகளின் ஆழம் அறிந்த இப்ஸனிடம் அடைக்கலம் புகுந்தோமில்லையே நாம்!

யுவன்: அதுவும் சமூகக் கொடுமைதான்!

கிழவன்: அதெப்படி?

யுவன்: இந்தப் பாழாய்ப் போன ஹிந்து சமூகத்தில்தான் நம சேர்க்கை அடிக்கடி சாத்தியமாகிறது. ஒரு ஷா, இப்ஸன், ஷேக்ஸ்பியர் நம்மையெடுத்துக் கையாளாததன் ரகசியம் இதுதான்!

பெண்: இது மட்டும்தானு? எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? அவர்கள் எல்லோரும் உண்மையிலேயே இலக்கிய கர்த்தாக்கள். நம்மைச் சந்தியில் இழுத்து இப்படி ஆட வைக்கும் இந்த ஹிந்து ஆசிரியர்கள்......

யுவன்: இலக்கிய கர்த்தாக்கள் அல்லர் – ஆம், நீ சொல்லுவதும் உண்மைதான். இலக்கிய சிருஷ்டி செய்ய விரும்புகிறவன் சமூகத்தின் மேலெழுந்த வாரியான விதிகளை நீக்கிவிட்டு, மனித ஹிருதயத்தை உள்ளபடி ஆராய்ந்து அறிய முயலுவான்

கிழவன்: சமூக விதிகள் வெறும் திரைகள். முக்கியமான விஷயங்கள் எல்லாம் அந்தத் திரைகளுக்கு அப்பாலேயே உள்ளன.

யுவன்: இந்த வங்காள நாபுக்கள் வழவழ கொழகொழவென்றுஎழுதித்தள்ளி ..

பெண்: 'ஐயோ பாவம்! அந்தோ பரிதாபம்!' என்றெல்லாம் எழுதிப் பக்கத்தை நிரப்பி, வாசகனைக் கிள்ளி அழ விட்டுவிட்டு, கடைசியில் 'எங்கள் கலையே கலை! கண்ணீர் துளிக்கும்படி உருக்கமாக எழுதி விட்டோம், பார்!' என்று பெருமை பாராட்டிக் கொள்ள ஆரம்பித்து விடுகிருர்கள்.

கிழவன்: மனிதனை அழவைப்பதா பிரமாதம்? மூக்கால் அழுவதற்குச் சந்தர்ப்பம் எப்போது வாய்க்கும் என்று அவன்தான் காத்திருக்கிருனே!

பெண்: அழுகையை மீறிய சோகத்தை- சிரிப்பை மீறிய ஆனந்தத்தை...

யுவன்: மனசின் மகோன்னதமான சிகரங்களையும், படுகுழிகளையும் ....

பெண்: நிழலுருவங்களாகிய நமக்கே இவ்வளவு தெரிகிறது இந்த மனிதர்கள் ஏன் ஒரே மாதிரியான கதையைச் சலிப்பில்லாமல் திரும்பத் திரும்பப் படித்து விட்டு, 'ஆஹா! ஊஹூ!' என்று போற்ற ஆரம்பிக்கிருர்கள்? இது இந்த ஊரில்தான் சாத்தியமாயிருக்கிறது!

யுவன்: இந்தஆசிரியன் யாரோ தெரியவில்லை. பார்த்தால் வடக்கத்தியானுகத் தோன்றவில்லையே!

பெண்: வடநாட்டவன் இல்லை.

கிழவன்: எனக்குத் தெரியும் இவன் யார் என்று இவன் ஒரு புதுத் தமிழ் எழுத்தாளன்.

பெண்: ஐயையோ! வட இந்திய இலக்கியத்துக்கே இவ்வளவு நாளாகச் சொந்தமாக இருந்த நம்மை இன்று இங்கும் இழுத்தாகிவிட்டதா?

யுவன்: உஷ்! பேசாதே! அவன் எழுதப்போகிருன்!

(மூவரும் நிழலுக்குள் நகருகிருர்கள். ஆசிரியன் நிமிர்ந்து பேனுவைக் கையிலெடுக்கிருன்.)

(11ஆம் பக்கம் பார்க்க)

# சுரண்டல் தளையுடன் விடுதலை

□□ நேரு யக்குப் அசன் □□

ரேணுவும் ரைசாவும் சாதாரண இரு சிறுமிகள். ரேணுவுக்கு வயது 10; ரைசாவுக்கு 12. ஆனல் ரேணுவும் ரைசாவும் டாக்கா நகரிலுள்ள பாபுர சேரியில் வாழும் அத்தனை பேருக்கும் வழிகாட்டிகள். இருவரும் மாதம் தோறும் ஆளுக்கு 400 ரூபா உழைப்பதே அதற்குக் காரணம். வீட்டிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் இருவரும் உதவியாளர்களாக வேலை செய்கிறார்கள்.

அவர்களின் தந்தையின் பெயர் அசார் அலி. பங்களாதேஷின் தலைநகரான டாக்காவிற்கு அவர் 1986ஆம் ஆண்டு, தன் குடும்பத்தினருடன் குடி பெயர்ந்தார். அங்கு அசார் அலியின் மனைவி, மாணவர் விடுதியொன்றில் வேலைக்குச் சேர்ந்தாள். சொற்ப சம்பளத்தில், மிளகாய் அரைப்பது அவரின் வேலை. அவரின் சொற்ப வருமானம் அடுப்பு எரிய உதவியது.

அசார் அலி சைக்கிள் றிக்சோ ஓட்டினர். ஒரு நாளைக்கு 20 ரூபா வரை அவருக்குக் கிடைத்தது. அதைக் கொண்டு ஆறு குழந்தைகளுள்ள குடும்பத்தை அவர் பராமரிக்க வேண்டும்; 500 ரூபா வாடகை செலுத்த வேண்டும். அந்த வீடு ஒரு மாளிகையல்ல. ஓரேயொரு அறைதான்.

தனது குடும்பத்தின் அவல நிலையை மாணவர் தலைவருக்கு எடுத்துச் சொன்னர் அசார் அலியின் மனைவி. அவர் தனது மாமனின் ஆடைத் தொழிற்சாலையில் ரேணுவுக்கும் ரைசாவுக்கும் வேலை வாங்கிக் கொடுத்தார். அவர்களுக்கு கிழமைக்கு ஆறுநாட்கள் வேலை. காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை வேலை. நண்பகலில் அரை மணித்தியாலம் சாப்பாட்டு லீவு அந்த நேரத்தில் ரேணுவும் ரைசாவும் சாப்பிடுவதில்லை. காலையில் வேலைக்குப் புறப்படு முன் ஒரு தடவை சாப்பிடுவார்கள். வேலை விட்டு வீடு திரும்பிய பின்புதான் அடுத்த உணவு

தொழிற்சாலை மனேஜருக்குப் பிடித்தால் வெள்ளிக்கிழமை பிற்பகல் லீவு கொடுப்பார். அந்த நேரத்தில் வேலை செய்தால் 4 ரூபா ஓவர்ரைம் பணம் கிடைக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இரண்டு சிறுமிகளும் ஓவர்ரைம் வேலை செய்வார்கள்.

ரேணுவையும் ரைசாவையும் போலப் பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள் பங்களாதேஷில் வேலை செய்கிறார்கள். இந்த வேலை போனல் அவர்கள் பட்டினி தொழிலதிபர்களுக்கு இது தெரியும். அதனல்தான் ஏழைத் தொழிலாளர்களைச் சுரண்டுகிறார்கள். தொழிலாளர்களுக்கும் இது தெரியும். தமது உரிமைகள் பற்றி அவர்கள் அறியாமலில்லை. அதே வேளையில் பேரம் பேசும் வல்லமை தங்களுக்கில்லை என்பதும் அவர்கள் அறிந்ததே.

இன்று மூன்று இலட்சம் பேர் பங்களாதேஷிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். அவர்களில் 80 சதவீதத்தினர் இளம் பெண்கள். ரேணுவையும் ரைசாவையும் போன்ற சிறுமிகள் அதிகம்.

ஆடை தைக்கும் தொழில் பங்களாதேஷுக்குப் புதியது. முதலாவது நிறுவனம் 1980 ஆம் ஆண்டில், தென்கொரியக் கம்பெனியொன்றுடன் கூட்டுத்தொழிலாக ஆரம்பிக்கப்பட்டது. ஐந்நூறு தொழிலாளர்கள் அதில் வேலைக்கமர்த்தப்பட்டனர். தென்கொரியர்கள் தொழிற்பயிற்சி கொடுத்ததோடு, தையல் இயந்திரங்களையும் வழங்கினர். தைத்த ஆடைகள் முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

1987 ஆம் ஆண்டில் பங்களாதேஷ் 23 இலட்சம் சேர்ட்டுக்களை ஏற்றுமதி செய்தது. பன்னிரண்டு கோடி ரூபா அன்னியச் செலாவணி வருமானம் கிடைத்தது. அதன் விளைவு? ஆடைத்தொழிற்சாலைகள் எங்கும் தோன்றின. இன்று 700 தொழிற்சாலைகள் வேலை செய்கின்றன. நாட்டின் முதலாவது அன்னியச் செலாவணி சம்பாதிக்கும் தொழிலாக, ஆடைக் கைத்தொழில் மாறியது, வழக்கமாக அந்த இடத்தை வகித்து வந்த சணல் ஏற்றுமதி, இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது.

இத்தொழிற்சாலைகளில் திருமணமாகாத இளம் பெண்களுக்கு அதிகம் வாய்ப்பு. அதற்குப்பல காரணங்கள். தொழிற்சங்கத் தொடர்பு இருக்காது. சொற்படி கேட்டு வேலை செய்வார்கள். திருமணமானதும் வேலையைத் தாமாகவே விட்டு விடுவார்கள்.

இதனல் நாட்டின் சமூக அமைப்பினதும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. வீடுகளில் வேலை செய்த சிறுமிகள் சொல்லாமல் கொள்ளாமல் ஆடைத் தொழிற்சாலைகளில் சேர ஆரம்பித்தனர். தொழிற்சாலைகளில் அதிக சம்பளமும் அதிக சுதந்திரமும் கிடைத்தமையே அதற்குக் காரணம். காலை முதல் நள்ளிரவுவரை அடிமையாக வீடுகளில் உழைப்பதிலும் பார்க்க ஆடைத் தொழிற்சாலை வேலை நல்லதாகப் பலருக்கும்பட்டது. ஆனல் அந்த இனிப்பு அனுபவம் நீண்டகாலம் நிலைக்கவில்லை.

மொலினவின் அனுபவம் அதற்கு எடுத்துக் காட்டு. மொலின 19 வயது யுவதி. எட்டு ஆண்டுகளாகத் திருமதி அப்துல்லாவின் வேலைக்காரியாக இருந்தாள். தனது வேலையை உதறித் தள்ளிவிட்டு ஆடைத் தொழிற்சாலையொன்றில் சேர்ந்தாள். வேலையும் இலகுவில் கிடைத்துவிட்டது. மாதம் 800 ரூபா சம்பளம். தனது சக ஊழியரின் வீட்டில் அவர் குடியேறினர். ஆனல் சொற்ப காலத்தில் எல்லாம் கசந்துவிட்டது.

கட்டாய ஓவர்ரைம் வேலை செய்யும்படி அவர் வற்புறுத்தப்பட்டார். இரவு வீடு திரும்புவது பெரும் தொல்லையாக இருந்தது. காடையரின் தொல்லை இரவில் அதிகம். அத்துடன் அவரின் உழைப்பு அறை வாடகைக்கும் உணவு, உடைச்செலவுகளுக்கும் மட்டுமே போதுமானதாக இருந்தது.

சில ஆண்டுகளில், போதிய ஏற்றுமதி ஓடர்கள் கிடைப்பதில்லை. அப்போது தொழிற்சாலைகளை மூடிவிடுவார்கள். 1987 இல் 500 தொழிற்சாலைகள் மூடப்பட்டு, பல்லாயிரக் கணக்கானோர் வேலையை இழந்தனர். அப்போது அவர்கள் வீட்டு வேலைக்குத் திரும்ப முயற்சித்தனர். ஆனல் அவர்களை ஏற்க எவரும் தயாராகவில்லை. ''நானே என் அலுவல்களைச் செய்வேன்'' என்று கத்தினர் திருமதி கபீர்.

இப்பொழுது ஆடைத் தொழிற்சாலைகளுக்கு நல்ல வருமாய். பங்களாதேஷின் தைத்த ஆடைகளுக்கு, அமெரிக்காவில் நல்ல கிராக்கி. ஆனல் ரேணுவும் ரைசாவும் தொடர்ந்து சுரண்டப்படுகிறார்கள்.

(ஈழநாடு) □

# இளவட்டம்

## நானாக நான்

நான்
நானாக இருக்கிறமுயற்சியில்
நண்பர்களுடனெல்லாம்
முரண்பட்டுக் கொள்கிறேன்.
என்னுடைய
இயலாமையே இதுதான்.
அவனுக்கு 'அவனாக'வும்
இவனுக்கு 'இவனாக'வும்
இருக்க முடிவதில்லை.
நேசத்தின் பெயரில்
எவரையும் எதற்கும்
நான் நிர்ப்பந்தித்ததில்லை.
ஆனாலும் .....
எனது மனித நேயத்தை
மற்றவரிடமும் தேடிய
முயற்சியில்
மறைமுகமாய்
வஞ்சிக்கப் பட்டிருக்கிறேன்.

துரும்பில் இருக்கிற இறைவன்
உடம்பிலும் இருப்பான் எனத்
திடமாக நம்பினேன் நான்.
அது மட்டுமல்ல –
'உண்மைத் தேடலுக்கு' முன்
என்னைத்தேடி நான்
எனக்குள் சென்றவழியில்......
காந்தியையும்
கோட்சேயையும் கூடக்
கண்டிருக்கிறேன்

— நல்லூர்தாஸ் □

## காரணம்

என்னுடைய அப்பா
எப்போதும் சீறிவிழுகிறார்
எனக்கு விளங்கவில்லை,

அன்பாய் அரவணைக்கும்
அம்மா —
அதிகம் கதைக்கிறாளில்லை
ஒரே தலையிடி என்பாள்
ஒவ்வொரு நாளும்.

அண்ணா அடிக்கடி
அமைதியாவான்.
தனித்திருக்கப் பிரியப்படுவான்
நெருங்கிலும்
''சீவீண்வேலை'' என்று
தன்னைத்தானே
நொந்து கொள்வான்

அக்கா அடிக்கடி
கோயில் போவாள்
மனமுருகி...
வீட்டு முகட்டில்
எதையோ தேடுவாள்.

என்னுடைய தங்கை
இரவில்
கெட்ட கனவு கண்டு விட்டு
எழும்பிக் கத்துவாள்.

தம்பி —
அவனுக்குப் பிடித்த நிறம்
சிவப்பு:
இருட்டில் எல்லாம்
பழக்கப்பட்டவன் போல்
நடப்பான்

- சாவ. சண்முகதாசன் □

## சில்லறைச் சோகங்கள்

ஒரு மருத்துவசாலையின் மௌனம் போல்
உள்ளத்து உணர்ச்சிகள்
அந்தரங்கமாக மௌனித்துக் கொண்டன.
இதயமோ ஒரு நோயாளி போல
சந்தோஷ ஆயுளுக்காக அவஸ்தைப்
பட்டுக் கொண்டது.
தேவைப் படாமலே இதயம்
கண்களுக்கு ரத்ததானம் செய்தது.
உயிரில் விழுந்த காயங்களுக்கு
உள்ளம் மெல்லக் கட்டுப போட்டுக் கொள்கின்றது.
இந்த மனநோயை மாற்ற மருத்துவன்
இந்த மண்ணில் இன்னும பிறக்கவிலலை.
வாழ்த்திருக்கும் வைத்தியனுக்கோ — இதற்கு
இன்னும வைத்தியமே புரியவில்லை.
சிகிச்சை இல்லைத்தான் இந்தச்
சில்லறைச் சோகங்களுக்கு.

செல்வி பா. பூரணி □

## வன விலங்கு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாலையை உடனடியாக மூட நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்கிறார் டொக்ரர் பெர்னான்டோ. அதைச் செய்வது யார்? பொலிசாருக்கோ வேறு வேலை சைநிறைய உண்டு.

1984 ஆம் ஆண்டில் அந்தத் தேசிய வன எல்லைக்குள் 88 குடும்பங்களே இருந்தன. அத்துடன், ரெட்சிக் காலத்தில் அங்கு வந்து140 குடும்பங்கள் புகையிலை பயிரிட்டு வந்தன அவர்கள் எல்லாருக்கும் வேறிடங்கள் பார்த்துக் கொடுத்து விட்டனர். ஆனால் இப்பொழுது நூற்றுக்கணக்கான குடும்பங்கள் குடியேறிவிட்டன.

பிரச்சினையுள்ள கிழக்கு மாகாணத்தை ஒட்டிய பகுதியிலேதான் அத்துமீறிய குடியேற்றங்கள் நடைபெறுவதாக எண்ணிவிட வேண்டாம். மலைப்பிரதேசத்திலுள்ள ஹக்கலை பாதுகாப்பு வலயத்திலும் இதே கதைதான். எழுபதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் அத்துமீறிக் குடியேறி வாழ்ந்து வருகின்றன. அவர்களை வெளியேற்றுமாறு அட்டர்னி ஜெனரல் உத்தரவு வழங்கியாகிவிட்டது. அவர்களை அகற்றுமாறு உதவி அரசாங்க அதிபருக்கு பணிப்புரை வழங்கியாகிவிட்டது. ஆனால் அவர்களை வெளியேற்ற இயலாது தத்தளிக்கிறார் அவர்.

அத்துமீறிக் குடியேறியவர்கள் காட்டை அழித்து களனிபாக்கி உருளைக்கிழங்கு பயிரிடுகிறார்கள். அரசியல் சக்திகள் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றன. வனவிலங்குப் பகுதி வழக்குவைத்தது. ஆனால் நீண்டகாலம் கட்டளையைக் கொடுக்க முடியவில்லை. இப்பொழுது கட்டளை கொடுத்தாகிவிட்டது; வழக்குத் தீர எத்தனை காலம் பிடிக்குமோ?

குமன பறவை காப்பகத்திலும் இதே கதைதான். அங்கு குடியேறியவர்கள் பறவைகளைக் கொல்கிறார்கள். கருவாடு போட்டுக் கூட இறைச்சியை விற்கிறார்கள். பறவைகள் மீன் பிடிக்கும் குளத்தில் அவர்கள் மீன் பிடிக்கிறார்கள். அழகான பறவைகள் அங்கு வருவதைக் குறைக்க ஆரம்பித்து விட்டன.

ஆனால் வனவிலங்கு பாதுகாப்பு இலாகாப் பணிப்பாளர் டொக்ரர் எஸ். டபிள்யூ கொடகா இன்னும் நம்பிக்கையிழக்கவில்லை நாட்டின் பாதுகாப்பு நிலைமை சீரடைய, அத்துமீறி அட்டகாசம் புரிபவர்களை, விரட்டி விடலாம் என்று நம்புகிறார்.

நன்றி: இலங்கை சூழல் கொங்கிரஸ் □

''மரணத்தின் மர்மக்கதை / முடிவுதான் தெரியவில்லை. இறந்தவர்கள் / ஒருவருமே அனுபவத்தைச் சொல்லவில்லை.''

இது எழிலன் என்ற இந்திய நாட்டுக் கவிஞனின் கூற்று இந்தக் கவிதையைப் பொய்யாக்கும் விதத்திலே கடவுளின் மகன் கிறீஸ்து மரணத்தை வென்று உயிர்த்த சம்பவத்தை கிறீஸ்தவ மக்கள் இப்போது மீண்டும் மீட்டிப் பார்க்கிறார்கள்.

கிறீஸ்துவின் உயிர்ப்பைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் அவரது சிலுவை மரணத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் சிலுவைச் சாவுக்கு ஒரு சாவுமணி அடித்து அதன் பின்பு ஒரு புதிய வாழ்க்கை உண்டு என்பதனைக் கிறீஸ்து மக்களுக்கு எடுத்துரைத்தார்.

இருப்பினும் மக்கள்மேல் கொண்ட அன்பினால் கிறீஸ்து தானாகவே வந்து சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டார். பின்பு கல்லறையில் அடக்கப்பட்டார். மூன்று நாட்களின் பின்பு அவருடைய சீடர் இராயப்பர் கல்லறையில் கடவுளைக் காணவில்லை என்று ஓடிச் செல்கிறார். அன்று அந்தக் கல்லறையோடு கதை முடிந்திருந்தால் இயேசுவின் உயிர்ப்பின் கதையும் முடிந்திருக்கும். ஆனால் கதை அன்றுடன் முடியவில்லை. ஆம். உயிர்த்த கிறீஸ்து ஆங்காங்கே தோன்றி பலருக்குக் காட்சியளித்து தனது உண்மை மகிமையை எடுத்துரைக்கின்றார்.

# ''உயிர்ப்பு - புவியெங்கும் பூரிக்கும் ஒரு காவியம்''

சகோ. ஜீவனதாஸ் பர்னாந்து

கிறீஸ்து ஏன் சிலுவையில் தொங்கி இறக்க வேண்டும்? என்ற கேள்வி பல மக்களிடையே எழுந்த வண்ணம் இருக்கின்றது. இதற்குக் காரணம் உண்டு. அவர் மக்களை அன்பு செய்தார். இந்த அன்பு அவரை முழுமையாக ஆட்கொண்டதினால் மக்களின் பாவங்களுக்குத் தன்னையே முற்றாகப் பலியாக்குகின்றார். அதனால் சிலுவையினை நாம் தியானிக்கின்றபோது கிறீஸ்துவின் அன்பு வெளிப்படுகின்றது. இதே அன்பு கிறீஸ்துவின் உயிர்ப்பினால் முத்திரை இடப்பட்டு புது வாழ்வு உறுதிப்படுத்தப்படுகின்றது.

*நாளை மறுதினம், உலகெங்குமுள்ள கிறீஸ்தவர்கள் கிறீஸ்துவின்உயிர்ப்பு விழாவினைக் கொண்டாடுகிறார்கள். அதனையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.*

அன்று ஜெருசலேம் நகரத்தில் இருந்த சமூகச்சூழல் அமைப்பினை உற்று நோக்கினால் கிறீஸ்துவின் வாழ்க்கையின் அர்த்தம் புரியவரும். அன்று கிறீஸ்து யூத அதிகாரிகள் ஏற்படுத்திய அல்லது எதிர்பார்த்த சட்டங்களுக்கு மாறாக சேவை, நீதி, அன்பு என்று வாழ்வினை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டார். இவரது கருணையால் பல குருடர்கள் பார்வை பெற்றனர். பல தொழுநோயாளர் குணமடைந்தனர். பல முடவர்கள் நடந்தனர். பல செவிடர்கள் கேட்கும் சக்தியைப் பெற்றனர். தன்னை ஏழைகளின் ஒரு நண்பனாக மாற்றி அமைத்து, பல பணக்காரர்களுக்குச் சாவுமணி அடித்தார். நீதி, நியாயம், உண்மை வர வேண்டும் என்ற நோக்கில் சமுதாயத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தினார். ஆனால் அவர் தூக்கி எறியப்பட்டார்.

கிறீஸ்து 2000 வருடங்களுக்கு முன்பே உயிர்த்துவிட்டார். இது ஓர் வரலாற்று நிகழ்ச்சி. இதில் இருந்து அறிந்த உண்மை என்ன? கடவுள் அவரை ஒருபோதும் கைவிடவில்லை. பாடுகளின் போதும். மரணத்தின் போதும் இறந்த அவர் உயிர்ப்பின் மகிமையைக் காட்டுகின்றார். உயிர்ப்பின் மூலம் கிறீஸ்து தமது இரட்சணிய வாழ்வுக்குரிய கதவுகளையும் ஜன்னல்களையும் எல்லா மக்களுக்கும் திறந்து வைக்கின்றார். இதனால் நாம் கிறீஸ்துவின் வாழ்க்கையினைக் கடைப்பிடிக்கும்போது கடவுள் தம் ஒரே மகனை உயிர்ப்பித்ததுபோல எங்கள் அனைவரையும் உயிர்ப்பிப்பார்.

## கிறீஸ்து ஏன் மூன்றாம் நாள் உயிர்த்தார்?

கிறீஸ்து கடவுளின் மகனாக இருந்தும் ஏன் முதலாம் நாளே உயிர்க்கவில்லை? அவர் மூன்றாம் நாள்வரை பொறுத்திருந்ததன் காரணம் என்ன? இப்படியான கேள்விகள் பல எழ நியாயமுண்டு, இதற்கு ஒரு காரணமுண்டு. அக்கால யூதமக்கள் ஒரு மனிதன் இறந்து விட்டான் என்று அறிந்தால் மூன்று நாட்கள் அந்த உடலைக் கிடத்தியிருப்பார்கள். காரணம் மூன்று நாட்களுக்கு அவனை ஆவி சுற்றி வரும் என்றும் சந்தர்ப்பம் கிடைத்தால் உடனடியாக அந்த உடலுக்குள் புகுந்துவிடும் என்றும் நம்பிக்கை அவர்களிடம்இருந்தது. மூன்று நாட்களுக்கு அந்த உடல் அசைவில்லாமல் கிடந்தால் உண்மையிலேயே இறந்து விட்டான் என்ற நம்பிக்கை அக்கால யூத மக்களிடம் இருந்தது. இதனைக் கிறீஸ்து பயன்படுத்துகின்றார். தான் உண்மையிலேயே இறந்துதான் உயிர்த்தார் என்பதனை நிரூபிக்கவே இதைப் பயன்படுத்தினர். யூத அமைப்புக்களை மனதில் கொண்டு தன்னுடைய உடலாகிய ஆலயத்தை மூன்று நாளில் கட்டியெழுப்புவேன் என்று கூறிய வாசகங்களை, நாம் நற்செய்தியில் காண்கின்றோம். இதில் இருந்து கிறீஸ்து உண்மையிலேயே இறந்துதான் உயிர்த்தார் என்ற வரலாற்று நிகழ்ச்சியின் உண்மை தெளிவாகின்றது.

## பாரதியும் கிறீஸ்துவின் உயிர்ப்பும்

20 ஆம் நூற்றாண்டில் பல கவிஞர்களும் கிறீஸ்துவின் உயிர்ப்பைப்பற்றி எடுத்துரைக்கின்றார்கள். பாரதியும் கிறீஸ்துவைக் கடவுளாகக் கண்டு அவர் மூன்று நாளில் உயிர்த்தார் என்பதை எடுத்துரைக்கின்றார்.

''ஈசன் வந்து சிலுவையில் மாண்டான் / எழுந்து உயிர்த்தனன் நாளொரு மூன்றில் ...''

இது பாரதியின், உயிர்ப்பு பற்றிய கவிதை. அத்தோடு பாரதி கூறுகின்றார்:

''உண்மை என்ற சிலுவையிற் கட்டி / உண்மைத் தவம் கொண்டிருந்தால் / வண்மைப் பேருயிர் யேசுக்கிறீஸ்து / வானமேனியில் அங்கு விளங்கும் ''

இங்கு பாரதி இயேசுவைக் கடவுள் என்றும், அவர் சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தார் என்றும் கூறுகிறார். அத்தோடு அவர் நம்மிடம் உள்ள தீய உணர்வுகளைத் தவம், உண்மை என்ற கருவிகளால் வென்றால் நாமும் உயிர்த்தெழலாம்; முக்தி அடையலாம் என்றும் கூறுகின்றார்.

## கிறீஸ்துவின் உயிர்ப்பும் எமது வாழ்வும்

கிறீஸ்துவுக்குள், கிறீஸ்து வழியாக நாம் பெற்ற அனைத்தும் அவரது மரணம், உயிர்ப்பின் பலன்கள். அவரது மரணத்துடன் அனைத்தும் முடிந்திருந்தால் கிறீஸ்தவ மறையும் இன்று கல்லறையில்தான் புதையுண்டு கிடக்கும். அனைவருக்கும் உயிரூட்டும் உயிர்ப்பு மறையுண்மை என் வாழ்வில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சாவுக்கே சாவு மணி அடித்த சாகா மரம் கிறீஸ்து, உயிர்த்த நாள் முதல் தன் தந்தையுடன் புதிய உறவு கொண்டுள்ளார். இந்த உறவினைத்தான் நாம் அனைவரும் பெறவேண்டும் என்று விரும்புகிறார். அதனால் இந்த உயிர்ப்பு விழா நமக்கு கூறும் பாடம் நமது வாழ்விலே புதிய திருப்பம் கண்டு புதிய வாழ்வு வாழ வேண்டும் என்பதேயாகும். □

# மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலும் அடி; சர்வதேச மன்னிப்புச் சபைக்கு எல்லாப்பக்கத்திலும் அடி!

சர்வதேச மன்னிப்புச் சபையை ''பயங்கரவாத நிறுவனம்'' என அண்மையில், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன வர்ணித்தார். அத்தோடு நில்லாது அந்நிறுவனம் பயங்கரவாதிகளுக்கு உதவி வருகின்றதென்றும் குற்றஞ்சாட்டினார்.

இத்தகைய அபாண்டமான குற்றச்சாட்டுகள் பற்றி றெஜி சிறிவர்த்தன — மனித உரிமைகளுக்காக இலங்கையிலே போராடுபவர்களில் முன்னணியில் நிற்பவர் — பின்வருமாறு கூறுகின்றார்: சர்வதேச மன்னிப்புச்சபை பயங்கரவாத நிறுவனம் என்ற குற்றச்சாட்டை நான் ஏற்கவேயில்லை. முதலாவதாக அதன் தாராள மனப்பான்மை அது எத்தகைய பயங்கரவாதக் குழுக்களுக்கும் ஆதரவு வழங்கவோ தன்னை அதனுடன் சேர்த்து இனங்கண்டு கொள்ளவோ இடங்கொடுக்காது. பல்வேறு கோணங்களிலிருந்தும், பல்வேறு மட்டங்களில் இருந்தும் சர்வதேச மன்னிப்புச்சபைமீது கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்டு வருகின்றன. எனக்கு இது ஆச்சரியமளிக்கவில்லை. ஏனென்றால் குறிப்பாக அரசாங்கங்களுக்கு, சர்வதேச மன்னிப்புச் சபையைக் கண்ணிலே காட்டக் கூடாது. ஒரு காலத்திலே இந்தச் சபை இடதுசாரிச் சார்புடையது, ஏன் கொம்யூனிஸ்ட் சார்புடையது என்று கூட மேற்கத்தைய அரசாங்கங்கள் குற்றஞ் சாட்டின. ஆனல் பிரஸ்னேவ் சோவியத்தின் ஜனாதிபதியாக இருந்த காலத்தில், இம் மன்னிப்புச் சபை மேற்கத்தைய அரசாங்கங்களின் சார்பானது என்று சோவியத் அரசாங்கம் கருதியது. மூன்றாம் உலகிலே ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு உதவும் ஒரு நிறுவனமாக, சர்வதேச மன்னிப்புச் சபையை சில மூன்றாம் உலக அரசாங்கங்கள் கருதின. இதிலிருந்து ஒன்று தெளிவாகின்றது: சர்வதேச மன்னிப்புச் சபை நடாத்தும் விசாரணைகளின் விளைவாக அம்பலமாகும் உண்மைகள், ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளவர்களுக்குப் பெருஞ்சங்கடத்தைக் கொடுக்கின்றன. ஆதலால்தான் மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலும் அடி, சர்வதேச மன்னிப்புச் சபைக்கு எல்லாப் பக்கத்திலும் அடி. என்னைப் பொறுத்தவரை சர்வதேச மன்னிப்புச் சபை கொள்கையளவில் நடுநிலை வகிக்கின்றது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. எனினும், சர்வதேச மன்னிப்புச்சபை செயற்படும் முறையிலிருந்து ஒரு பிரச்சினை எழுகின்றது என நினைக்கின்றேன். வேறு பல மனித உரிமைகள் நிறுவனங்களைப் போன்று ச. ம. சபையும், அரசு கட்டவிழ்த்துவிடும் ஒடுக்கு முறையினால் பாதிக்கப்படுபவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது தனது பணி என்ற எடுகோளிலிருந்து தொடங்கியது. அரசுக்கு எதிராக மனித உரிமைகளைப் பேணிப்பாதுகாத்தலே—அவற்றிற்காகக் குரல் கொடுத்தலே—தனதுபணிஎன்று அதுநினைத்தது. கிட்டத்தட்ட ஒவ்வொரு மனித உரிமை நிறுவனமும் ஆரம்பத்தில் கடைப்பிடித்த நிலைப்பாடு இது. மரபு வழி வந்த நிலைப்பாடே இது என்று நான் நினைக்கின்றேன்.

இந்த உளப்பாங்கில் மாற்றம் எதுவும் செய்யப்பட வேண்டும் என நினைக்கின்றீர்களா? என்று கேட்ட கேள்விக்கு, றெஜி பின்வருமாறு பதிலளித்தார்: ''மரபுவழி வந்த இத்தகைய உளப்பாங்கிற்கு ஒரு கால கட்டத்தில் நியாயம் இருந்தது. ஏனென்றால் அப்பொழுது அடக்குமுறைச் சாதனங்கள் கிட்டத்தட்ட முழுவதுமே அரசின் கைகளில் தான் இருந்தன. எனவே, மனித உரிமைகளைப் பலாத்காரமாக மீறும் சாத்தியப்பாடு, பெரும்பாலும் அரசையே சார்ந்திருந்தது. ஆனால் இன்றோ நிலைமைவேறு. இலங்கையில் மட்டுமல்ல வேறு எத்தனையோ நாடுகளிலும் நிலைமை மாறி விட்டது. ஏனென்றால் பலாத்காரத்தைப் பாவிக்கும் சக்தி அரசின் ஏகபோகமாக மட்டும் இருக்கவில்லை. ஆயுதம் ஏந்திய குழுக்களிடமும் இத்தகைய சக்தி உண்டு. எமது நாட்டின் அண்மைக்கால வரலாறு இதற்குச் சான்று பகரும். ஆயுதம் ஏந்திய குழுக்கள் அரசுக்கு எதிராக மட்டும் ஆயுதங்களை நீட்டவில்லை; தமது அரசியல் எதிரிகளுக்கு சாதாரண மக்களுக்கு எதிராகவும் கூட ஆயுதங்களை நீட்டினார்கள். மாறுபட்ட கருத்துக்களை நசுக்குவதற்கும், பல்வேறுவகை எதிர்ப்புக்களை முறியடிப்பதற்கும் கொலைகள் செய்யப்பட்டன.

அரசைச் சாராத குழுக்கள் மனித உரிமைகளை மீறும் போது அவற்றினையும் ச. ம. சபை போன்ற நிறுவனங்கள் அம்பலப்படுத்த வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? என்றதற்கு, ''ஆம்'' என்று விடையளித்த றெஜி, தனது நிலைப்பாட்டினை மேலும் விளக்குகையில் கூறியதாவது:

ச. ம. சபை உட்பட பெரும்பாலான மனித உரிமைக் குழுக்கள், மரபு வழிவந்த தமது உளப்பாங்கினாலும் செயற்படும் முறையினாலும் இந்தப் புதிய நிலையைச் சமாளிப்பதற்குச் சங்கடப்படுகின்றன.

(அடுத்த வாரம் முடியும்)

# நிகழ்வுகள்

## 3-4-90 செவ்வாய்

நீதியமைச்சரின் சிபார்சின் பேரில் 800 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்; ராஜீவைத் தாக்க முயன்ற விஜித் ரோஹண சில்வாவும் விடுவிக்கப்பட்டார் □ போதிய மாணவர்கள் இல்லாததால் யாழ். திறந்த பல்கலைக்கழகம் நெருக்கடியிலுள்ளதாக பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்தார் □ காரைநகர் கடற்படை முகாம் விஸ்தரிப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும், கடற்படை அதிகாரிகளுக்குமிடையில் கடற்படை முகாமில் பேச்சுவார்த்தை நடைபெற்றது □ 15 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் கடத்தி வந்த பெண்ணொருவர் கட்டுநாயக்காவில் கைதானார்

## 4-4-90 புதன்

கோண்டாவிலில் வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்கு வே பிரபாகரன் அளித்த பேட்டியின் போது, பிரேமதாஸ அழைத்தாலும் தான் கொழும்பு செல்ல மாட்டாரெனத் தெரிவித்தார் □ நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்த ஜனாதிபதி "நாட்டின் இனப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்." எனக் குறிப்பிட்டார். சு. க. ம. ஐ மு., ஐ. சோ. மு. ஆகிய கட்சிகள் இவ்வைபவத்தைப் பகிஷ்கரித்தன □ லிதுவேனியக் குடியரசின் சுதந்திரப் பிரகடனத்தை இலங்கை அங்கீகரிக்க வேண்டுமென, லிபரல் கட்சி அறிக்கையொன்றில் கோரியுள்ளது

## 5-4-90 வியாழன்

வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதில் அரசாங்கம் அவசரம் காட்டாது என, செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜேரதன தெரிவித்தார் □ உண்மை நிலையை அறிய அமெரிக்க, பிரஞ்சுத் தூதரக அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து, பல இடங்களைச் சுற்றிப் பார்வையிட்டனர் □ தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டுமென்ற தீர்மானம், மத்திய மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது □ எவ்வேளையிலும் ஆயுதங்களைக் கீழ் வைக்கவோ ஒப்படைக்கவோ மாட்டோம் என, விடுதலைப்புலிகள் இயக்கத்தைக் சேர்ந்த ரூபன் திருமலையில் தெரிவித்தார் □

## 6-4-90 வெள்ளி

எமக்கு மீண்டும் யுத்தம் வேண்டுமா? கொலைகள் இடம்பெற வேண்டுமா? மீண்டும் அகதிகள் தோன்ற வேண்டுமா? இதனை நன்கு சிந்தித்துச் செயற்பட வேண்டுமென, கோட்டேயில் ஜனாதிபதி தெரிவித்தார் □ வடக்கில் அடகு வைக்கப்பட்ட 34,000 நகைப் பொதிகள் கொழும்பில் தேங்கியிருப்பதாக, மக்கள் வங்கி அதிகாரியொருவர் தெரிவித்தார் □

## 7-4-90 சனி

வட — கிழக்கு ஆசிரியருக்கு அடுத்த மாதம் மீண்டும் இடமாற்ற வசதி கிடைக்க விருப்பதாகச் செய்தி வெளியானது □ கல்லுண்டாயில் மினி பஸ் குடைசாய்ந்ததில் 12 பேர் காயமடைந்தனர் □ நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டுமென, விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் தெரிவித்தார் □

## 8-4-90 ஞாயிறு

தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பாவிக்கமுடியாத 2,200 ஆயுதங்கள் இராணுவத் தலைமையகத்தில் அழிக்கப்பட்டன □ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 500க்கு மேற்பட்ட தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர் □ யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 12 லட்சம் ரூபாவை, மலையகத்துக்கு ஈரோஸ் ஒதுக்கியிருப்பதாக வே. பாலகுமார் தெரிவித்தார்

## 9-4-90 திங்கள்

ஜூன் 7 ஆம் திகதிக்கு முன் வட கிழக்கு மாகாணசபைக் கூட்டத்தை நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுவருவதாக மாகாணசபை அமைச்சர் அபுயூசுப் கொழும்பில் தெரிவித்தார் □ கொழும்பில் நடைபெறும் அரசு — புலிகள் பேச்சுவார்த்தையில் கிழக்கு மாகாண நிலைமை பற்றி முக்கியமாக ஆராயப்பட்டது □ இந்தியப்படையின் தாக்குதலால் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கு ரூபா 20 கோடி நஷ்டம் ஏற்பட்டதாக அதன் தலைவர் சி. கனகரத்தினம் தெரிவித்தார் □

## கருணாநிதி...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கெதிராகவே ஒரு இரக்கமற்ற போரில் அவர்கள் ஈடுபட்டார்கள். மரபு நிலைமைகளுக்கு மாறுபாடான புதிய (இலங்கைக்கு மட்டும்) செரில்லாப் போர் நிலைமைகளின் கீழ் அவர்கள் போரிட வேண்டியிருந்தது.

எதிரி பற்றிய தேசபக்தி வசப்பட்ட ஆவேச நிலையையும் கொள்ள முடியாத போர் அது. அர்ச்சுனர்களை எதிர்த்துத் துரோணர்கள். இந்தியர்கள் மகாபாரதத்தில் அர்ச்சுனனின் பக்கம்தான். இலங்கையில்?

நாடுதிரும்பிய அமைதிப்படை இந்திய தேசபக்தர்களுக்குத் தரக்கூடியதாக வெற்றி எதையும் கொண்டுவரவில்லை. இந்த போர் நிகழ்ந்த காலங்களில் ராஜீவ் அரசு தன் சகல பிரசார சாதனங்களையும் பயன்படுத்தி இந்தியப்படை முன்னேறுகிறது, முன்னேறுகிறது என்று சொல்லியது. ஆனால் ராஜீவின் வீழ்ச்சியோடு பின்னால் வந்த வி. பி. சிங் அரசு இந்தியத் துருப்புக்களை நிபந்தனைகளின்றியே வாபஸ் பெற்ற போது, இந்தியப்படை எங்கே முன்னேறியது? எதைப்பிடித்தது? நாடு திரும்பும்போது எதைக் கொண்டு வந்தது? என்ற கேள்வி, சராசரி இந்தியனின் மனதில் எழாமலா போயிருக்கும்?

இந்தியத் துருப்புக்களின் தோல்வியும், அவர்கள் வெற்றி பெறாமலே நாடு திரும்பியமையும் ராஜீவ் அரசின் பிழையான அணுகுமுறைகளின் விளைவுகளே என இந்தியர்கள் நம்புகிறார்கள் போலும். இந்தியர்கள் நாடு திரும்பிய துருப்புக்களை வரவேற்றதென்பது வெறும் சம்பிரதாய பூர்வமானதுதான். உணர்வு பூர்வமானதல்ல.

ராஜீவ் அரசு உள்நாட்டில் தனக்கெதிரான ஊழல் குற்றச்சாட்டுக்களிலிருந்து இந்தியரின் கவனத்தைத் திருப்ப இலங்கையில் நடந்த போரைப் பயன்படுத்தியது. ராஜீவின் வீழ்ச்சியோடு இலங்கையில் இந்தியத் துருப்புக்கள் ஈடுபட்டிருந்த யுத்தத்தின் தேசபக்தித் தன்மையும் அடிபட்டுப்போயிற்று.

இதனால் தான் கருணாநிதியின் கூற்று இந்திய தேசபக்தர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லை. கருணாநிதியும் — எத்தகைய உள்நோக்கத்தைக் கொண்டிருந்தபோதிலும் கூட — தனது சொந்த நாட்டின் படையினரையே அவமதித்ததன்மூலம், ஒரு வீரத் தமிழனாகிவிட்டார் என்று சொல்லலாம் அல்லவா? □

## நாடகக் கலை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பனைப் பொருட்கள், சிறு அளவிலான முகம்பார்க்கும் கண்ணாடி முதலியன ஒவ்வொருவரின் உடைகளுக்கு முன்னால் சிறிய தட்டுகளிலே வைக்கப்பட்டிருந்தன. நான் அறையை பார்த்துக் கொண்டிருக்கும் அதேவேளை நாடகம் பாதிக்குமேல் நகர்ந்து கொண்டிருந்தது. ஒப்பனை அறையில் நுழைந்த ஒரு நடிகர் தனக்குத் தானே ஒப்பனை செய்ய ஆரம்பித்து விட்டார். அவர் எந்தவிதமான பரபரப்புமின்றிக் காணப்பட்டார் முக ஒப்பனை முடிந்து தனக்குரிய ஆடைகளை அணிந்து கொண்டு மேல் மாடியிலிருந்த ஒப்பனை அறையை விட்டு படிக்கட்டு வழியே இறங்கிக் கொண்டிருந்தார். ஒரு சில விநாடிகளுக்குள் அவர் மேடையில் தோன்றி எதுவித சலனமுமின்றி நடிக்கத் தொடங்கி விட்டார் இச்சம்பவம் எனக்கு அவர்களின் வளர்ச்சி எத்தகையது என்பதை எடுத்தியம்பியது. தான் ஒப்பனையில் ஈடுபட்டிருக்கும் போதும் தான் ஏற்று நடிக்கும் பாத்திரம் தோன்ற வேண்டிய நேர அவதானமும் மேடையை நோக்கிச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. எத்தனை கலைஞர்கள் அவர்களைப் போல் நம்மிடையே உண்டு. ஆளைத் தேடிப் பிடித்து பிடரியில் பிடித்தல்லவா மேடைக்குள் தள்ளவேண்டிய நிலைமையிலிருக்கிறோம்.

### ஆடை அணிகள்

ஒப்பனையின் ஓர் அங்கமான ஆடை அணி மணிகளைப் பொறுத்தவரை காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப அமைய வேண்டும். நான் பார்த்த புராண இதிகாசங்கள் சம்பந்தமான சிலைகளிலும், ஓவியங்களிலும் வரும் கதாபாத்திரங்கள் இடுப்பிலிருந்து கீழ்ப் பகுதி வஸ்திரத்தில் தாறு கட்டியும், இடுப்பைச் சுற்றி இடுப்புக் கச்சமும், இடுப்புக்கு மேல் திறந்த மேனியும், கழுத்து. மார்பு, கைகள், காதுகளில் அணிகலன்களும், தோளில் அங்க வஸ்திரமும், தலைமேல் அவரவர் தகைமைகளுக்கேற்ப உலோகத்தாலான கிரீடங்களும் காணப்பட்டன.

வரலாற்று நாடகங்களில் மேற்கூறியவாறு காணப்படினும் மேலங்கியும் கிரீடத்துக்குப் பதிலாக வைரம், முத்து. தங்கச்சரிகைகள், இழையப்பட்ட தலைப்பாகையும் காணப்பட்டன. தலைப்பாகையில் அழகிய பட்சி இறகுகள் பொருத்தப்பட்டிருந்தன. தலைமயிரைப் பொறுத்தவரை புராண இதிகாச நாடகங்களுக்கு தலை உச்சியின் மேல் தலைமயிரை ஒன்று கூட்டி கொண்டைகட்டிக் கொள்ளும் வழக்கமேயிருந்திருக்க வேண்டும். கட்டுக்கு அடங்காத மயிர் தலையின் பின்புறமாகத் தொங்கிக் கொண்டிருந்திருக்க வேண்டும். உதாரணமாக இராமபிரான் கிரீடமணிந்து காணப்படும் போது தலைமயிர் பின்புறமாகச் சிறிது காணப்படுகிறதேயொழிய கொண்டை காணப்படுவதில்லை. ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்புகூட நம்மவர்கொண்டை கட்டியிருந்தனர் அப்படியாயின் தோள்வரை கேசம் தொங்கவிடப்பட்டகாலமெது எனக் கேள்வி எழலாம், அது நமது சமீபகாலக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். உதாரணமாக பாகவதர் குரோப் என்று நாம் எல்லோரும் அழைப்பதிலிருந்தே ஊகிக்கலாம். பெண்கள் கூட தலையின் மேற்புறத்திலேயே கொண்டை கட்டிக் கொண்டனர். பின்னலைப் பின்னித் தொங்க விட்டனர். பின்னல் 5 வகைப்படும் எனக் கூறுவர். பின்னலை தலைமீது சுற்றிக் கட்டிக் கொள்வதுமுண்டு. தலைவிரி கோலமாக நீராடும் போதும், படுத்துத் துயிலும் போதும், கணவனை இழந்து விட்ட நிலையிலும் காட்சியளிக்க வேண்டுமென்பது நம் முன்னோர் வகுத்த நெறி. நம் தேசத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் எதிர்காலத் தலைவர்கள் உருவாக்கும் கல்விக்கூடங்கள் நமது பண்டைய நாடகங்களைப் படைக்கும் போதாவது இம் மாதிரியான விடயங்களில் கூடிய கவனம் செலுத்தினால் நலமாயிருக்கும்.

தொழில் முறை நாடகங்களைவிட பயில் முறை நாடகங்கள்தான், ஒப்பனையாளனின் சிந்தனையைத் தூண்டிப் புதுப்புதுப் பரிசோதனைகளை செய்து பார்க்கக் கூடிய பரிசோதனைக் கூடம்.

காலத்திற்கேற்ப நாகரீகம் மாறலாம். வரலாற்று நாகரீகம் மாற முடியாது. இத்தகைய விடயங்களில் ஒப்பனையாளன் வரலாற்று, புதைபொருள் ஆராய்ச்சியாளரிடம் கலந்தாலோசித்துச் செயற்பட வேண்டும். சர்வமும் தனக்குத் தெரியும் என்று இறுமாந்திருப்பவர்களால் கலைத்துறைக்குக் கேடேயன்றி, நலமொன்றும் விளையப் போவதில்லை. □

## வேலை நிறுத்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியன்: வேறு விதமாக எழுதலாம். (எழுதியதில் குறுக்கே ஒரு கோடு கிழித்து விடுகிறான். பிறகு சிறிது நேரம் பேனாக் கட்டையைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான் பிறகுபேனாவையும் கீழே வைத்துவிட்டுச் சாய்ந்து விடுகிறான். மூன்று சாயைகளும் தயங்கித் தயங்கி மறுபடியும் வெளிச்சத்துக்கு வந்து பேசுகின்றன.)

பெண்: சீ! தொழிலுக்கு இவன் புதிசு போலிருக்கிறது! இந்தப் பழங் கதையைக் கூடச் சரியாக எழுதத் தெரியவில்லை.

யுவன்: பழங் கதைகளைத்தன்னுடையவை என்று திருப்பி யெழுதி ஏமாற்றப் பார்ப்பவர்களுக்குத் தமிழ் ரசிகர்களாவது ஒரு தனி வரி விதித்தால் தேவலை.

கிழவன்: நம்மைப்பற்றிய கதைகளை வாசிக்கும் அயல் நாட்டார்கள் என்ன நினைப்பார்கள்?

யுவன்: ஸ்திரீகள் எப்போது விதவைகளாவார்கள் என்று காத்திருப்பவர்கள் இந்திய வாலிபர்கள் என்று நம்மைப்பற்றி உலகில் அபிப்பிராயம் பரவி விடும்.

பெண்: விதவைகளுக்குத் தான் இந்தியாவில் திருமணம் உண்டு என்று ஒரு மிஸ் மேயோ புஸ்தகத்தில் எழுதி விடுவாள்.

கிழவன்: இந்த மாதிரி நிலைமை நீடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது பொறுப்பு.

யுவன்: நாம் வேலை நிறுத்தம் செய்து விடலாமா?

கிழவன்: அப்படியென்றால். ?

யுவன்: இனிமேல் இந்த மாதிரிக் கதை எழுத எந்த ஆசிரியன் அழைத்தாலும், நாம் கவனிக்காமல், வராமல், கற்பனை லோகத்திலேயே இருந்து உறங்கிவிடுவோம்.

கிழவன்: நான் தூங்கத் தயார் பக்கி உன் பொறுப்பு.

யுவன்: (இளம் பெண்ணைப் பார்த்து) நீ?

பெண்: நாம் ஏதாவது நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும் ... இப்படித் தான் செய்யலாமே!

(பெண் உருவம் நடுவிலும்; மற்ற இரு உருவங்களும் இரு புறமுமாக, மூன்றும் கைகோர்த்துக் கொண்டு, முதலில் வெளிச்சத்திலிருந்து நிழலுக்கும், பின்னர் நிழலிலிருந்துகண்ணுக்குத் தெரியாமலும், மறைந்து விடுகின்றன.

ஆசிரியன் நாற்காலியில் அசைந்து உட்காருகிறான். அவன் மனம் சலனமின்றிச் சூனியமாக இருக்கிறது. இரண்டு முறை கொட்டாவி விடுகிறான்.)

ஆசிரியன்: பாக்கி நாளைக்குத் தான். (எழுந்திருக்கிறான். மணி ஒன்றடிக்கிறது. மேசை விளக்குத் தானாகவே திடீரென்று அணைந்துவிடுகிறது)

— இருள் திரை — □

திசை
THISAI

# இப்போது நிலவும் அமைதி தொடரும் என நம்புகிறோம்

## — பிரபா

"எமது மக்களை இலங்கை அரசு அடக்கி ஆண்டதற்கான நீண்டகால வரலாறு உண்டு. பலமுறை தமிழர்கள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தி ஏமாற்றப்பட்டுள்ளார்கள். அதன் விளைவே ஆயுதப் போராட்டமாகும். இலங்கை அரசு தமிழர்களையும், முஸ்லிம்களையும் நசுக்க எத்தனித்தால், நாம் போராடுவோம். ஆனால் தற்போது நிலவும் அமைதி தொடரும் என நம்புகிறோம்" இவ்வாறு சொன்னார் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன். நியூயோர்க் டைம்ஸிற்காக, அனிதா பிரதாப்பிற்கு அவர் அளித்த பேட்டியின்போதே, பிரபா மேற்கண்டவாறு சொன்னார். மேற்படி பேட்டி, ஏப்ரில் 9 ஆம் திகதி டைம்ஸில் வெளியாகியிருந்தது.

நம்பிக்கையின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததாயும், அந்த நம்பிக்கை இன்னமும் உண்டு எனவும் பிரபா மேலும் சொன்னார்.

ஜனாதிபதி பிரேமதாஸவுடனான பேச்சுவார்த்தைகள் ஒரு தந்திரோபாயமா எனக் கேட்கப்பட்டதிற்கு — "நாம் எவரையும் ஏமாற்றவோ துரோகம் செய்யவோ இல்லை. இதே வேளை எம்மை ஏமாற்றினால் அல்லது துரோகம் செய்தால், நாம் எதிர்ப்போம். ஆனால், எம்மை நம்பினால் நாமும் நம்பிக்கையாகவே நடந்துகொள்வோம்." என்று பிரபா பதிலளித்தார்.

இந்தியா திட்டமிட்டே இலங்கை இனப்பிரச்சினையை மோசமாக்கியதென, இந்தியாவைக் குற்றஞ்சாட்டிய பிரபா, இந்தியா இலங்கையைத் தனது செல்வாக்கிற்குள் கொண்டு வரும் பொருட்டு இலங்கையில் ஸ்தரமற்ற நிலைமையைத் தோற்றுவிப்பதற்காக, தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதங்களையும், பயிற்சியையும் வழங்கியது என்றும் சொன்னார்.

சிவிலியன்களின் இழப்பைக் குறைப்பதற்காக ஒரு கை பின்னால் கட்டப்பட்ட நிலையிலே இலங்கையில் யுத்தத்தை தாம் நடத்தியதாக இந்தியர்கள் சொல்கிறார்களே? என்று அனிதா பிரதாப் கேட்டார். "ஒருகை கட்டப்பட்ட நிலையில் எமது மக்கள்மீது இவ்வளவு கொடுமைகளை அவர்கள் புரிந்திருக்க முடியுமென்றால், இரண்டு கைகளும் சுதந்திரமாக இயங்கக்கூடிய நிலையில் அவர்கள் எவ்வளவு கொடுமைகளைச் செய்திருக்க முடியும் என்று கற்பனை பண்ணவே எனக்கு நடுக்கம் ஏற்படுகிறது" என்று பிரபா பதில் சொன்னார்.

அவரது பேட்டியின் தொகுக்கப்பட்ட சில பகுதிகள் வருமாறு:

தமிழர்களைப் பாதுகாக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டு இந்தியா இங்குவந்த முறையும், பிறகு எமது மக்களுக்கு எதிராக யுத்தம் ஒன்றைத் தொடங்கியதும் மன்னிக்க முடியாத குற்றங்கள் ஆகும். சாதாரண மக்கள் இழப்புக்களுக்குள்ளானபடியால், யுத்தத்தை நிறுத்தும்படி, யுத்தம் ஆரம்பித்த மூன்று நாட்களின் பின்பு நான் இந்தியாவைக் கேட்டிருந்தேன்.

ஆனால் எமது நிலைப்பாட்டை தவறாகக் கணித்து, எம்மைப் பலவீனமாகக் கருதி, இந்தியா எம்மை நசுக்கும் நோக்கத்துடன் தாக்குதலை ஆரம்பித்தது.

எனது உயர்மட்ட சகாக்கள் இந்திய ராணுவத்துடன் மோதுவதற்கு எதிராக என்னை எச்சரித்தனர். எவ்வளவு காலம் புலிகளால் தாக்குப் பிடிக்கமுடியும் என்று கேட்டனர். நான் அவர்களுக்கு வியட்நாம் உதாரணத்தைக் காட்டினேன்......

போரிடுவது என்று நாம் தீர்மானிக்கும்போது, வெற்றி — தோல்வி பற்றி நான் கவலைப்படவேயில்லை. எம்மிடம் போராடும் உறுதி உண்டா என்பதைத்தான் நாம் மதிப்பிடவேண்டும். தோல்வி வரும் என்று பயந்து மக்கள் தங்கள் இலட்சியத்தையும், உரிமைகளையும் விட்டுவிட முடியாது.

எமது மக்களின் சுதந்திரத்தில் எவரும் தலையிட முடியாது என்பதை நாம் நிரூபித்துள்ளோம்.

# திசைமுகம்

*"சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே"*

## கல்வி முறையில் மாற்றங்கள் வேண்டும்

உயர்கல்வி சம்பந்தமாக அரசு கடைப்பிடித்து வரும் போக்கு, இன்று கல்வி வளர்ச்சிக்குப் பெரும் குந்தகம் விளைவிப்பதாக உள்ளதாகவே பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

அண்மையில் கொழும்பு தனிநாயகம் கலாசார அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட "உயர் கல்வியின் சில அம்சங்கள்" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் துரைராஜா தமது தலைமை உரையில், உயர் கல்வியில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் பற்றி மறைமுகமாகக் கூறியுள்ளார்.

க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஆண்டுக்கு 36 000 மாணவர்கள் சித்தி எய்திய போதும் அவர்களுள் 6000 பேர் மாத்திரமே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர் என்றும் 1965இல் 5000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர் என்றும் இன்று 25 வருடங்கள் கழிந்ததன் பின்னும் 6000 பேர் மாத்திரமே அனுமதிக்கப்படுகின்றனர் என்றும் அவர் தனது தலைமை உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர் கல்விக்கு இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த நிலை எதைக் காட்டுகிறது?

உயர் கல்விக்குப் போதிய அளவு தகுதியுடையவர்கள் இருந்தும் கல்வி சம்பந்தமாகத் தகுந்த திட்டமிடல் அரசிடம் இல்லாததால் உயர்கல்விக்குரிய உரிமை பறிக்கப்பட்ட நிலையில் இளம் சந்ததியினர் தமது சக்தியையும், ஆற்றலையும் விரயப்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தென்னிலங்கையில் அரசு முகம் கொடுக்கும் பயங்கரவாதத்துக்கும் இது ஒரு காரணமாகும்.

ஒரு நாட்டின் வளம் தகுந்த முறையில் பயன்படுத்தப் படவும், அதன் மூலம் அந்நாட்டின் பொருளாதாரம் நன்கு கட்டியெழுப்பப்படவும், அதனால் அந்நாட்டு மக்கள் சுபீட்சமும் சந்தோசமும் பெற்றுவரவும் வழி வகுப்பது திட்டமிட்ட கல்வி முறையே.

உயர்கல்விக்கான இடவசதி இன்மை என்பது எல்லோரையும் ஒன்றிரண்டு பல்கலைக்கழகங்களுக்குள் புகுத்த முனைவதால் நாம் ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு செயற்கையான சிக்கலே. இதிலிருந்து விடுதலை பெற நமது நாட்டின் மூலவளங்கள், அது சார்ந்த உயர்கல்வி அமைப்புகள் பரவலாக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் நமது கல்விப்பாடத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்படவேண்டும்.

இன்றைய இனப்பிரச்சினை தீர்க்கப்படாது, பாதுகாப்புக்கென்ற பேரில் கோடிக்கணக்கான பணத்தை விரயப்படுத்திக் கொண்டிருக்கும் அரசு, இவற்றை சுமுகமாகத் தீர்த்து வைத்து, நாட்டை மேன்மைப்படுத்தும் கல்வியை சகல இளம் சந்ததியினருக்கும் கொடுப்பதற்கு தனது நிதியைப் பயன்படுத்த வண்டுவதே இன்றைய தேவையாகும்.

# சிண்டு முடிப்பிற்கு மறுப்பு

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சிண்டு முடியும் நோக்கத்துடன் வழமைபோல், கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையான 'சண்' வெளியிட்டிருந்த செய்தியொன்றை விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் மறுத்திருக்கிறார்.

தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க இப்போது டில்லியில் ஆட்சியிலிருக்கும் வி.பி.சிங் அரசின் உதவியைப் பெற்று மீண்டும்போராடுவோம் என்ற கருத்துப்பட டொமினிக் சொன்னதாக ஏப்ரில் 9 ஆம் திகதி 'சண்' பத்திரிகையில் வெளியாகியிருந்த தலைப்புச் செய்திக்கே டொமினிக் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

# ஒத்துவராத மொறிஷியஸ்

வரதராஜப் பெருமாள் மொறிஷியஸ் தீவில் இருப்பதாக வதந்திகள் உலவுகின்றன அல்லவா? இது பற்றி 'ஐலண்ட்' பத்திரிகையில் ரொமேஷ் பெர்னண்டோ ஒரு கட்டுரையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

மொறிஷியஸிற்கும் இலங்கைக்கும் ஒத்துவராத நிலையே தொடர்கிறது.

எண்பதுகளின் மத்தியில் மொறிஷியஸ் அரசுத் தலைவராயிருந்த சிவுசாகுர் ராம்கூலம் என்பவர் இலங்கைத் தமிழரின் பிரிவினைப் போராட்டத்தை ஆதரித்து உலகெங்கும் பிரசாரம் செய்தவரென்றும், கடந்த நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கண்டி அரசைக் காட்டிக்கொடுத்த சிங்கள அதிகாரியான எகல பொல என்பவனும், 1820 இல் மொறிஷியஸிற்கே அனுப்பப் பட்டானென்றும், இன்று ஈழப்பிரகடனம் செய்துவிட்டு நாட்டை விட்டு அகன்ற வரதராஜப் பெருமாளும் மொறிஷியஸிற்கே போயிருக்கிறார் என்றும் அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'ஐலண்ட்'இன் கவலை

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிற்கு தங்களிற்கு அழைப்பு விடுவிக்கப்படாததற்கான காரணத்தைப் புலிகள் தெரிவிக்கவில்லை என, ஐலண்ட் ஆங்கிலப் பத்திரிகை கவலைப்பட்டுள்ளது.

கடந்த 83 யூலை இனக் கலவரத்தின் போது மற்றைய சில பத்திரிகைகள் போலல்லாது ஐலண்ட், தமிழருக்கு எதிரான ஓட்டத்திற் சேராது தனித்து நின்றதென்றும், இதனை யானையைப்போல மிக்க ஞாபக சக்தி கொண்ட விடுதலைப் புலிகள் நினைவில் வைத்திருக்க வேண்டும் எனவும், ஐலண்ட் மேலும் எழுதியுள்ளது.

# மரத்திலிருந்தும் மந்திரியே விழுவார்

மூன்று வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மந்திரிமார் மாற்றம், தொடர்பாக கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின்போது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ரிச்சார்ட் பத்திரன கூறியதாவது:

அரசாங்க தரப்பில் 77பேர் அமைச்சர் பதவி பெற்றுள்ளவர் 48பேர் சாதாரண எம்.பி. களாக உள்ளனர். இந்த வருடத்துக்குள் இவர்களுக்கும் மந்திரிப்பதவி கிடைக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை; இந்தியாவில் 25 அமைச்சர்களே உள்ளனர். இரும்புச் சீமாட்டி தட்சர் அமைச்சரவையிலும் குறைவாகவே உள்ளனர். ஆனால் இலங்கையில் நிலைமை மாறாக உள்ளது. இன்னும் சில நாட்களில் மரம் ஒன்றுக்குக் கல்லெறிந்தால் அமைச்சர் ஒருவரே கீழே விழுவார். பற்றை ஒன்றுக்குக் கல்லெறிந்தாலும் அமைச்சர் ஒருவரே வெளிவருவார்.

## எமது ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துடன் மூன்றும் மட்டக் கல்வியையும் நாம் பன்முகப்படுத்த வேண்டும். மீன்பிடி, விவசாயம் போன்றவற்றிற்குக் கல்லூரிகள் நிறுவப்பட்டு அவை பல்கலைக்கழகங்களோடு இணைக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்யாவிடில் கல்வியின் நோக்கம் நிறைவேருதுபோவதுடன், இளைஞர்மத்தியில் அமைதயின்மையும் அதிகரிக்கும். எமது கல்வியமைப்பு முற்று முழுதாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாம் கல்விக்குச் செலவிடும் பணம் விழலுக்கிறைத்த நீராகி விடுவதுடன் கல்விகற்கும் இளைஞருக்குப் பயன் எதுவும் கிடைக்காது.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 13 4 1990 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. D. / 83 / News / 90.